# சேலம் மாநகராட்சி

## 2026 - 2027

## வரவு - செலவுத் திட்டம்



# முத்தமிழறிஞர்
# டாக்டர். கலைஞர் அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்

திரு. **கே.என். நேரு** அவர்கள்



மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

திரு. **இரா.இராஜேந்திரன்** அவர்கள்

# சேலம் மாநகராட்சி



**திரு. ஆ. இராமச்சந்திரன்**
மாண்புமிகு மேயர்



**திருமதி. மா. சாரதாதேவி**
துணைமேயர்



**டாக்டர். மா.இளங்கோவன்**
ஆணையாளர்

# வார்டுகுழுத் தலைவர்கள்



திரு. சே.த. கலையமுதன்
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 1



திருமதி. செ. உமாராணி
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 2



திரு. த. தனசேகர்
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 3



திரு. மா. அசோகன்
வார்டுகுழுத் தலைவர்
மண்டலம் - 4

# நியமனக்குழு உறுப்பினர் - நிலைக்குழு தலைவர்கள்



**திரு. ஆ. தமிழரசன்**
நியமனக்குழு உறுப்பினர்



**திருமதி. கோ. மஞ்சுளா**
கணக்கு நிலைக்குழு தலைவர்



**திரு. பெ. முருகன்**
கல்வி நிலைக்குழு தலைவர்



**திரு. அ.ச. சரவணன்**
சுகாதார நிலைக்குழு தலைவர்



**திரு.கோ. குமரவேல்**
வரி மற்றும் நிதி நிலைக்குழு தலைவர்



**திரு. ஜெ. ஜெயக்குமார்**
நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தலைவர்



**திரு. ரா. சாந்தமூர்த்தி**
பணிகள் நிலைக்குழு தலைவர்

## மாமன்ற உறுப்பினர்கள்



திரு. சி. பன்னீர்செல்வம்
கோட்டம் - 2



திருமதி. சே. மகேஸ்வரி
கோட்டம் - 4



திருமதி. த. தனலட்சுமி
கோட்டம் - 5



திரு. எம். மூர்த்தி
கோட்டம் - 8



திரு. வெ. தெய்வலிங்கம்
கோட்டம் - 9



திருமதி. ரா. சாந்தி
கோட்டம் - 10



திருமதி. தே. இந்துஜா
கோட்டம் - 11



திருமதி. இரா. சங்கீதா
கோட்டம் - 12



திரு. மா.ஸ்ரீ. ராஜ்குமார்
கோட்டம் - 13



திருமதி. கோ.கு.ம. வசந்தா
கோட்டம் - 16



திருமதி. தி.ராஜேஸ்வரி
கோட்டம் - 17



திரு. ஆ. சரவணன்
கோட்டம் - 18



திருமதி. எஸ். தேன்மொழி
கோட்டம் - 19



திரு. பொ. பிரதீப்
கோட்டம் - 20



திரு. வெ. ஜனார்த்தனன்
கோட்டம் - 21



திரு. கே.சி. செல்வராஜ்
கோட்டம் - 22

## மாமன்ற உறுப்பினர்கள்



திருமதி. அ. சிவகாமி
கோட்டம் - 23



திருமதி. கி. சந்திரா
கோட்டம் - 24



திருமதி. மா. சசிகலா
கோட்டம் - 25



திருமதி. கு. சவிதா
கோட்டம் - 27



திருமதி. கு. கிரிஜா
கோட்டம் - 29



திருமதி. ர. அம்சா
கோட்டம் - 30



திரு. எஸ்.ஏ. சையத்மூசா
கோட்டம் - 31



திருமதி. க. பௌமிகா தப்சிரா
கோட்டம் - 32



திருமதி. பு.சீ.ஜெயஸ்ரீ
கோட்டம் - 33



திரு. து. இளங்கோ
கோட்டம் - 34



திருமதி. மா. பச்சியம்மாள்
கோட்டம் - 35



திரு. நா. யாதவமூர்த்தி
கோட்டம் - 36



திரு. மா. திருஞானம்
கோட்டம் - 37



திருமதி. மா. ஜெயந்தி
கோட்டம் - 39



திருமதி. எஸ். பூங்கொடி
கோட்டம் - 41



திருமதி. க.மு. மஞ்சுளா
கோட்டம் - 42

# மாமன்ற உறுப்பினர்கள்



திரு. எம். குணசேகரன்
கோட்டம் - 43



திரு. மு. இமயவர்மன்
கோட்டம் - 44



திருமதி. செ. சுகாசினி
கோட்டம் - 45



திருமதி. ஜெ. மோகனப்பிரியா
கோட்டம் - 46



திருமதி. எஸ். புனிதா
கோட்டம் - 47



திருமதி. ரா. விஜயா
கோட்டம் - 48



திருமதி. எஸ். மோகனப்பிரியா
கோட்டம் - 49



திரு. ந. பழனிசாமி
கோட்டம் - 50



திரு. பி.எல். பழனிசாமி
கோட்டம் - 51



திருமதி. எஸ். ஷாதாஜ்
கோட்டம் - 53



திருமதி. க. கனிமொழி
கோட்டம் - 54



திருமதி. எஸ். தனலட்சுமி
கோட்டம் - 55



திரு. மா. சீனிவாசன்
கோட்டம் - 57



திரு. ரா. கோபால்
கோட்டம் - 58



திரு. செ.ஆ. வரதராஜ்
கோட்டம் - 60



திரு. மு. கௌதமன்
நியமன உறுப்பினர்



**திரு.ஆ.இராமச்சந்திரன்**
மாண்புமிகு மேயர்

## முகவுரை

வணக்கம்,

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.**

**நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்கு புகழொளி சேர்ப்பதாகும்.**

என்ற அய்யன் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தமிழ்நாட்டை நமது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார்** அவர்கள் அனைத்து துறைகளிலும் தனி கவனம் செலுத்தி மக்களுக்கான பல நல்ல திட்டங்களை தீட்டி இரவு பகல் என பாராமல் புதிய யுக்திகளை கையாண்டு மக்களுக்கு சென்று சேரும் வகையில் கவனமாக செயல்படுத்தி வருகிறார்.

அதில் சேலம் மாநகராட்சிக்கு பெருமை சேர்க்கும் வகையில் கடந்த நான்கு ஆண்டுகளாக சேலம் மக்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு, நலத்திட்ட உதவிகள், பள்ளிகளுக்கென தனி கவனம் செலுத்தி கட்டிடங்கள், பள்ளிகளுக்கு தேவையான உபகரணங்கள், மருத்துவ வசதிக்கு மக்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையிலேயே ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர் நல மையங்கள், மருத்துவ முகாம்கள், மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்கள் என மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து கொண்டிருக்கும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் சாலை வசதி, தெருவிளக்கு, குடிநீர் விநியோகம், மழைநீர் வடிகால் வசதி போன்ற மக்கள் தேவைகளுக்கென நிதி ஒதுக்கி செயல்படுத்தி வருகிறார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு உறுதுணையாக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்களும்** மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, சேலம் மாநகராட்சியின் 2026–2027ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையை தாக்கல் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் பெரும்பாலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில பணிகள் நடைபெற்று வருகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறேன். கடந்த ஆண்டில் ரூ.49.85 கோடி மதிப்பீட்டில், சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளது. அதேபோல், வடிகால் பணிகள் ரூ.22.92 கோடி மதிப்பீட்டிலும், நீர்வழி பாதையில் உள்ள பாலங்கள் உயர்மட்ட பாலங்களாக மாற்றி அமைக்கும் பணிகள் ரூ.5.55 கோடி மதிப்பீட்டிலும் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. கட்டிட பணிகள் ரூ.10.95 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.7.87 கோடி மதிப்பீட்டிலும் மற்ற இதர பணிகள் ரூ.7.42 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சில திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாநகர மக்கள் பயன்பெறும் வகையில் 2026–2027ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. அத்திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும்போது இம்மாநகரம் பெரும் வளர்ச்சி பெற்று தமிழ்நாட்டில் முன்னோடி நகரமாக மாறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

உழைப்பிற்கு உதாரணமாக இருந்து தமிழ்நாட்டு மக்களின் நலன் மீது அக்கறை கொண்டு இரவு பகல் என பாராது எந்த நேரமும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் வழியை பின்பற்றி சேலம் மாநகராட்சி பகுதி மக்களின் நல்வாழ்விற்காக ஒவ்வொரு நாளும் உழைத்து கொண்டிருப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். இதற்கு உறுதுணையாக இருக்கின்ற துணை மேயர், அனைத்து மண்டலத் தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள் மற்றும் எனது சகோதர, சகோதரிகளான மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கும் மதிப்பிற்குரிய ஆணையாளர் அவர்களுக்கும், துணை ஆணையாளர், உதவி ஆணையாளர்கள், அனைத்து நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



**ஆ.இராமச்சந்திரன்**
**மாண்புமிகு மேயர்**



**டாக்டர்.மா.இளங்கோவன்**
ஆணையாளர்

## முகவுரை

**வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை** - குறள்

**பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை ஏற்படுத்தி, மேற்கொண்டு இடையூறுகளை நீக்க வல்லவனே செயலைச் செய்வானாக.**

சேலம் மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கிட வருகின்ற **2026–2027** ஆம் ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு சொத்து வரி, காலியிட வரி, தொழில் உரிமைக் கட்டணம், வரியில்லா இனங்கள், குத்தகை வசூல், குடிநீர் கட்டணம் மற்றும் வருவாய் தரக்கூடிய பிற இனங்கள் மூலம் கூடுதல் வருவாயினை ஈட்டவும் பொது நிதியினை சீரான முறையில் கையாண்டு திட்டமிட்டு செலவிட்டு மாநகராட்சியின் நிதி நிலையினை மேம்படுத்தி திறமையாக நிர்வகித்திட தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக மாற்ற அயராது பணியாற்றி வரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சீரிய தலைமையில் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்** அவர்கள், தொடர்ந்து பல்வேறு அறிவுரைகளையும், நிதி ஆதாரங்களையும் வழங்குகின்ற **மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்** அவர்கள், திட்டப் பணிகளை நேராய்வு செய்து தக்க ஆலோசனைகளை தொடர்ந்து வழங்கி வரும் **மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்** அவர்கள், சேலம் மாநகர மக்களுக்கான பணிகளை திறம்பட செய்து வரும் சேலம் மாநகர தந்தை **மாண்புமிகு மேயர்** அவர்கள் மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி, சேலம் மாநகராட்சியில் **2026–2027** ஆம் ஆண்டில் அறிவிக்கப்படவுள்ள பெரும்பாலான திட்டப் பணிகளை முழுமையாக நிறைவேற்றிட வரவு–செலவு திட்டத்தினை முன்மொழிவதில் பெருமை அடைகிறேன்.

சேலம் மாநகர பொது மக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதார வசதி, சாலை வசதிகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், கழிப்பிடங்கள், ஓடைகள் தூர் வாருதல் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், மேலும், அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றவும், பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்திட இந்த மாபெரும் பொறுப்பையும் கடமையையும் கொடுத்து எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.



**டாக்டர்.மா.இளங்கோவன்**
**ஆணையாளர்**

# சேலம் மாநகராட்சி

## மாண்புமிகு மேயர்

## திரு. ஆ. இராமச்சந்திரன் அவர்களின்

## 2026 – 2027 ஆம் ஆண்டிற்கான

## நிதி நிலை அறிக்கை மீதான உரை

## பொருளடக்கம்


| வ. எண். | விபரம் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | பொது விவரங்கள் | 1 – 19 |
| 2. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் | 20 – 27 |
| 3. | மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022-23 ஆம் ஆண்டின் மானிய கோரிக்கை அறிவிப்புகள் | 28 |
| 4. | பொறியியல் பிரிவு | 29 – 51 |
| 5. | பொது சுகாதாரம் | 52 – 61 |
| 6. | நகரமைப்பு திட்டப் பிரிவு | 62 – 63 |
| 7. | வருவாய் பிரிவு | 64 – 65 |
| 8. | கணக்கு பிரிவு | 66 – 98 |
| 9. | 2026 – 2027 ஆம் ஆண்டு புதிய திட்ட அறிவிப்புகள் | 99 – 100 |
| 10. | முடிவுரை | 101 – 102 |

## சேலம் மாநகராட்சி

### பொது விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சேலம் மாநகராட்சியின் பரப்பளவு | 91.34 ச.கி.மீ |
| 2. | மக்கட் தொகை (2011 கணக்கெடுப்பின்படி) | 8,29,267 |
| | தற்போதைய உத்தேச மக்கள் தொகை | 10,83,625 |
| 3. | மொத்த கோட்டங்கள் | 60 |
| 4. | வார்டு அலுவலகங்கள் | 4 |
| 5. | சூரமங்கலம் வார்டு அலுவலக கோட்டங்கள் – 14 | 1, 2, 3, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28 |
| 6. | அஸ்தம்பட்டி வார்டு அலுவலக கோட்டங்கள் – 14 | 4, 5, 6, 7, 8, 12, 13, 14, 15, 16, 17, 29, 30, 31 |
| 7. | அம்மாப்பேட்டை வார்டு அலுவலக கோட்டங்கள் – 16 | 9, 10, 11, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43,44 |
| 8. | கொண்டலாம்பட்டி வார்டு அலுவலக கோட்டங்கள் –16 | 45 முதல் 60 வரை |
| 9. | மொத்த சொத்து வரி விதிப்புகள் | 2,15,669 |
| 10. | மொத்த குடிநீர் இணைப்புகள் | 1,20,171 |
| 11. | மாநகராட்சியால் பராமரிக்கப்படும் சாலையின் நீளம் | 1037.173 கி.மீ |
| 12. | தார் சாலை | 840.474.கி.மீ |
| 13. | கான்கிரீட் சாலை | 114.947 கி.மீ. |
| 14. | பேவர் தளம் | 43.352கி.மீ |
| 15. | மண் சாலை | 38.400கி.மீ |
| 16. | மொத்த தெரு விளக்குகள் | 43986 |
| 17. | மாநகராட்சி பள்ளிகள் | 96 |

# சேலம் மாநகராட்சி நகர வரைபடம்
# (CITY MAP)



## சேலம் மாநகராட்சி

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2021 – 22 அறிவிப்புகள். அதன்படி கீழ்கண்டவாறு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.**

**அ. பாதாளச் சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் 548 கோடி ரூபாய் செலவில், 520 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகளும், கழிவுநீர் உந்து நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.**

சேலம் மாநகராட்சி அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், விடுபட்ட மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, பாதாள சாக்கடை அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை G.O.(Ms) No.125 MA & WS (MC-2) Department , Dated: 09.09.2022 ன்படி நிர்வாக அனுமதி, மற்றும் Roc.No.18484/2023/DO1, Dated: 21.07.2023 ன் படி சிப்பம்–1, 2, 3 மற்றும் 4 ஆகிய நான்கு சிப்பங்களாக மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை G.O.(Ms) No.71 Dated: 20.05.2024ன்படி இப்பணிக்கு ரூ.557.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணியினை நிறைவேற்ற ஒப்பந்தப்புள்ளி கோரி சிப்பம்–1 மற்றும் 2ற்கு 05.03.2024ல் பணி ஆணை வழங்கப்பட்டது. சிப்பம்–1, 2ல் பிரதான நீர்உந்து நிலையம் 3 எண்ணிக்கைகளும், நீரேற்று நிலையம் 30 எண்ணிக்கைகளும், 151.33 கிமீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகளும், நீர்உந்து குழாய்கள் 47.31 கி.மீ. நீளத்திற்கு பதிக்கவும், மேலும் 6626 எண்ணிக்கையிலான இயந்திர குழாய்களும் மற்றும் 31,784 எண்ணிகையிலான வீட்டுக் கழிவுநீர் இணைப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதில் தற்போதுவரை 34% பணிகள் முடிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை இத்திட்டத்திற்காக TUFIDCO மூலமாக மாநில மற்றும் மத்திய அரசின் மான்யமாக ரூ.57.53 கோடியும், TNUIFSL மூலமாக கடன் மற்றும் மான்யமாக ரூ.17.02 கோடியும் ஆக மொத்தம் ரூ.74.55 கோடி பெறப்பட்டு நாளதுவரை ரூ.73.96 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சிப்பம்–1 மற்றும் 2ற்கான பணிகள் யாவும் மார்ச்–2027ற்குள் முடித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிப்பம்–3 மற்றும் 4ற்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரை பெறப்பட்டு 23.12.2025 அன்று விலைப்புள்ளிகள் திறந்து, ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிப்பம்–3 மற்றும் 4ற்கு பிரதான நீர்உந்து நிலையம் 3 எண்ணிக்கைகளும், நீரேற்று நிலையம் 13 எண்ணிக்கைகளும், 180.73 கி.மீ. நீளத்திற்கு கழிவு நீர் குழாய் பதிக்கும் பணிகளும், நீர்உந்து குழாய்கள் 22.25 கி.மீ. நீளத்திற்கும் பதிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் 12017 எண்ணிக்கையிலான வீட்டுக் கழிவு நீர் இணைப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இப்பணிகள் யாவும் பணி உத்தரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து 36 மாதங்களுக்குள் முடித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஆ. மாநகராட்சிப் பகுதிகளில் தங்குதடையின்றி குடிநீர் கிடைக்கும் வகையில் தொகை ரூ.758.00 கோடி செலவில் கூடுதல் குடிநீர் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

குடிநீர் விநியோக மேம்பாடு திட்ட (WSIS) பிரேரணை மதிப்பீடு ரூ.693.49 கோடிக்கு தயார் செய்யப்பட்டு, 27.06.2022 ஆம் தேதியன்று நடைபெற்ற உயர் மட்ட குழுவில் அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து Transaction Advisor நியமிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி 29.09.2022 அன்று கோரப்பட்டு, M/S. Infra-En (India) Pvt.Ltd, நிறுவனத்திற்கு திட்ட பரிவர்த்தனை ஆலோசகரை (Transaction Advisor) நியமனம் செய்யப்பட்டு, புதிய குடிநீர் இணைப்பு விரிவாக்கம் சம்மந்தமாக தகுதிக்கான கோரிக்கையினை (Request for Qualification) TNIDB, Chennai அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பாக சென்னையில் 03.01.2024 ஆம் தேதியன்று தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான உயர்மட்ட நிலைக் குழு கூட்டத்தில் மொத்த மதிப்பீடு தொகை ரூ.758.13 கோடிக்கு இத்திட்டம் இறுதியாக்கம் செய்யப்பட்டு, 12.05.2025ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இப்பணிக்கான மதிப்பீட்டு தொகையில் 30% ஒன்றிய அரசும், 30% மாநில அரசும், 40% தெறிவு செய்யப்பட்ட பங்களிப்பு ஒப்பந்ததாரரும் (Concessionnaire) செலுத்தி பணிகள் மேற்கொள்ளவும், பணி துவங்கப்பட்ட காலம் முதல் 24 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணியையும் அவ்வொப்பந்த நிறுவனமே மேற்கொள்ளும் வகையிலும் அப்பராமரிப்பு காலத்தில் மாநகராட்சி வழங்க வேண்டிய தொகையை ஒப்பந்தப்புள்ளி கோரி பெற்றுக்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளிகள் வடிவமைக்கப்பட்டது. இப்பராமரிப்பு காலத்தில் ஒப்பந்த பங்களிப்பு தொகையை (Concessionnaire Share) ஒப்பந்த நிறுவனம் மீட்டெடுத்து கொள்ளும் வகையில் ஒப்பந்தப்புள்ளி கோர வகை செய்யப்பட்டது.

இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அழைப்பின் பேரில் 3 நிறுவனங்கள் பங்கேற்றன. அவ்விதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கிய 3 நிறுவனங்களுக்குள் தகுதி வாய்ந்த நிறுவனங்களுள் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s SUEZ Projects Private Limited, Gurgaon நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி அரசினால் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீட்டுக் குழுவினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு நிலைக்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஒப்பந்த நிறுவனம் வழங்கிய மறுவடிவமைப்பு மற்றும் செயல்திட்டம் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு பணிக்கான மதிப்பீட்டு ரூ.1035.61 கோடி என இறுதி செய்யப்பட்டு அரசின் திருத்திய நிர்வாக அனுமதி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

விலைக்குறைப்பு நடவடிக்கைக்கு பின் இறுதி செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.1055.27 கோடிக்குள் இப்பணியை எதிர்வரும் 5 ஆண்டுக்குள் முடிக்க ஒப்பந்தப்புள்ளி இம்மாமன்ற தீர்மானம் எண். 1001, நாள் : 09.02.2026–ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இப்பணி நிறைவுற்றப்பின் மாநகரில் குடிநீர் விநியோக அளவில் தற்போது நிலவும் ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டு மக்கள் அனைவரும் 24 மணி நேரமும் வேண்டிய போது தண்ணீரை பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகும்.

**இ. சேலத்தில் உள்ள போடிநாயக்கன்பட்டி ஏரி, மூக்கனேரி மற்றும் அல்லிக்குட்டை ஏரி போன்ற நீர்நிலைகளை மேம்படுத்துவதற்கான பணிகள் 69 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம் சி7) துறை, அரசாணை எண்: (3டி) 1, நாள்: 4.3.2023 ன்படி ரூ.52.00 கோடி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் திட்டத்தின் (I & A) கீழ் சேலம் மாநகராட்சியில் கீழ்கண்டுள்ள விபரப்படியான நீர்நிலைகளை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ரூ.கோடியில்)

| வ.எண். | வார்டு அலுவலகம் | நீர் நிலைகள் | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|
| 1. | சூரமங்கலம் | போடி நாயக்கன்பட்டி ஏரி | ரூ. 19.00 |
| 2. | அஸ்தம்பட்டி | மூக்கனேரி | ரூ. 23.00 |
| 3. | அம்மாபேட்டை | அல்லிக்குட்டை | ரூ. 10.00 |
| | | மொத்தம் | ரூ. 52.00 |

மேற்படியான பணிகளுக்கு 12.05.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெற்று, 05.06.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, 11.06.2023 ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அல்லிக்குட்டை ஏரி பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.5.2025 ஆம் தேதியன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மூக்கனேரி மற்றும் போடிநாயக்கன்பட்டி ஏரி ஆகிய 2 எண்ணிக்கையிலான நீர் நிலைகளின் மேம்பாட்டு பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளது.



அல்லிக்குட்டை ஏரி



மூக்கனேரி



போடிநாயக்கன்பட்டி ஏரி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2023 – 24 அறிவிப்புகள்.

**1. செட்டிச்சாவடியில் உள்ள குப்பைகளை பையோ மைனிங் முறையில் அப்புறப்படுத்தப்படும்.**

அதன்படி சேலம் மாநகராட்சி செட்டிச்சாவடியில் திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் உள்ள குப்பைகளை பையோ மைனிங் முறையில் அப்புறப்படுத்திட அண்ணா பல்கலைக் கழகம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசுக்கு சமர்ப்பித்து தற்பொழுது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.7.94 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 28.02.2025 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 30.4.2025 ஆம் தேதியன்று M/s Envirosome Solution Private Limited நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. நாளது தேதியில் 42000 Cu. Metre அளவிற்கு திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.

**2. சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் நீரேற்று நிலையம் அமைந்துள்ள தொட்டில்பட்டி மற்றும் கோம்புரான்காடு பகுதிகளில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பூஸ்டர் நிலையத்தை மதிப்பீடு தொகை ரூ.15.00 கோடியில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கீழ்கண்டுள்ள விபரப்படியான 4 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. நாளது தேதியில் இப்பணிகளுக்காக ரூ.4.25 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ➢ சேலம் மாநகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் தனிக்குடிநீர்த் திட்டத்தில் தொட்டில்பட்டியில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணி,
- ➢ தனிக்குடிநீர் திட்டத்தில் 155 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்தும் பணி
- ➢ தனிக் குடிநீர் திட்டத்தில் தொட்டில்பட்டியில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணி
- ➢ தனிக் குடிநீர் திட்டத்தில் கோம்புரான்காட்டில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்பட்ட நீருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணி

### 3. சேலம் மாநகராட்சியின் நங்கவள்ளி குடிநீர் திட்டம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ரூ.10.00 கோடியில் மேம்படுத்தப்படும்.

நங்கவள்ளி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துதல், கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் சுற்று சுவர் கட்டுதல் மற்றும் புதியதாக மோட்டார் பம்பு பொருத்துதல் போன்ற 4 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.10.00 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 15.10.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. நாளது தேதியில் இப்பணிகளுக்காக ரூ.4.24 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் விவரம் முறையே,

- சேலம் மாநகராட்சியின் 27MLD கொள்ளளவு கொண்ட நங்கவள்ளி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் புதியதாக குளோரின் ஆலை கட்டுமானம் அமைத்து கூடுதலாக குளோரின் கலக்கும் ஆலை மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலைய வடிகட்டி அமைப்பினை புதுப்பிக்கும் பணி.
- கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் புதியதாக பம்ப் மற்றும் மோட்டார் (Horizontal Split casing centrifugal pump cum HSC LT Motor 425KW, 3.3kv, 6 pole RPM 1482) அமைத்தல் மற்றும் மின்வட கம்பியினை மாற்றியமைத்தல் உள்ளிட்ட பணிகள்.
- கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் மின்காந்த ஓட்ட மீட்டர் (Electromagnetic Flow Meter) NRV மற்றும் Sluice Valves ஆகியவை மாற்றியமைக்கும் பணி.

கருமலைக்கூடல் நீர் உந்து நிலையத்தில் வடிகட்டி படுக்கை மாற்றியமைத்தல், புதியதாக Aeration tank மற்றும் நிர்வாக அலுவலகம், அலுவலக குடியிருப்பு ஆகியவற்றினை பராமரித்தல் உள்ளிட்ட பணிகள்.



## உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் நீண்ட காலமாக தீர்வு காணமுடியாத பிரச்சனைகளை சரி செய்யும் பொருட்டு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, மூலதன மானிய நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு,

1. சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.10இல் செங்கல்அணை பகுதியில் திருமணிமுத்தாறு குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூ.8.56 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்புந்தப்புள்ளி கோரி, 30.11.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. நாளது தேதியில் ரூ.1.28 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





2. கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.49இல் உள்ள அகரம் காலனி முதல் சூரியகவுண்டர் காடு வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.0.92 கோடிக்கு 2023– 24 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 22.01.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

3. கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.49இல் உள்ள செவ்வாய்பேட்டை மெயின் ரோடு முதல் அகரம் காலனி வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.0.88 கோடிக்கு 2023– 2024 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 22.01.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

4. சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.22 பகுதியில் சித்தர் கோவில் பிரதான சாலையில் RCC மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்தல் மற்றும் செஞ்சிக்கோட்டை ஓடையில் மழைநீர் வடிகால் மற்றும் கவர்ஸ்லாப் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.6.53 கோடிக்கு 2023– 2024 ஆம் ஆண்டு மூலதன மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 18.12.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

**5.** சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**03**ல் உள்ள இஸ்மாயில் கான் ஏரியை சுற்றி கம்பி வேலி அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.**0.39** கோடிக்கு **2023– 2024** ஆம் ஆண்டு **15**வது மத்திய நிதிக்குழு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கி, பணிகள் முடிவுற்றது.

**6.** சேலம் மாநகராட்சிக்குட்பட்ட அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் பகுதிகளில் மழைநீர் செல்லும் நீர்வழி பாதையில் அமைந்துள்ள பாலங்கள், மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கின் காரணமாக போக்குவரத்து மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதால், மேற்படி பாலங்களை உயர்மட்ட மேம்பாலமாக புதுப்பித்து கட்டும் பணிகள் கீழ் கண்டுள்ள விபரப்படி மூலதன நிதியில் மதிப்பீடு தொகை ரூ.**5.55** கோடியில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, **10.06.2025**ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, பணிகள் முடிவுற்றது. தற்போது மாண்புமிகு சுற்றுலா துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.



ATC நகர்



அருண் நகர்



KMS கார்டன்

(ரூ.கோடியில்)

| வ. எண். | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|
| 1. | 5,7 | கோட்டம் எண்.5 மற்றும் 7 இல் அமைந்துள்ள அழகாபுரம் பெரியபுதூரையும் ஏற்காடு சாலை பகுதிகளையும் இணைக்கும் ATC நகர் தரைபாலத்தை மேம்பாலமாக உயர்த்தி கட்டும் பணி | 2.05 |
| 2. | 15 | கோட்டம் எண்.15ல் அமைந்துள்ள அருண் நகர், லட்சுமி சுந்தர் நகரையும் இணைக்கும் பழுதடைந்துள்ள பாலத்தை புதியதாக கட்டும் பணி | 1.70 |
| 3. | 15 | கோட்டம் எண்.15ல் அமைந்துள்ள KMS கார்டன் பகுதியில் பழுதடைந்துள்ள குறுகிய பாலத்தை அப்புறப்படுத்திவிட்டு புதிய பாலமாக கட்டும் பணி | 1.80 |
| | | மொத்தம் | 5.55 |

## நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) ( NNT)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.12.2021 ஆம் தேதியன்று சேலம் மாவட்டத்தில் முதன் முதலாக நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) துவக்கி வைக்கப்பட்டது.



### நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) – (2022–23)

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மான்யமாக ரூ.4.18 கோடி மற்றும் பொதுமக்களின் பங்களிப்பாக ரூ.2.09 கோடி ஆக மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.6.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், குடிநீர் பணிகள், பூங்கா புனரமைப்பு, கட்டிடம் கட்டுதல் மற்றும் சாலை பணிகள் என மொத்தம் இதுவரை 35 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) – (2023–24)

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு மான்யமாக ரூ.4.18 கோடி மற்றும் பொதுமக்களின் பங்களிப்பாக ரூ.2.09 கோடி ஆக மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.6.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், குடிநீர் பணிகள், பூங்கா புனரமைப்பு, கட்டிடம் கட்டுதல் மற்றும் சாலை பணிகள் என மொத்தம் இதுவரை 27 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) – (2024–25)

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன், அரசு மானியம் பெற்று மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.2.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், குடிநீர் பணிகள், பூங்கா புனரமைப்பு, கட்டிடம் கட்டுதல் மற்றும் சாலை பணிகள் என மொத்தம் இதுவரை 25 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) – (2025–26)

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன், அரசு மானியம் பெற்று மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.5.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.இத்திட்டத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், குடிநீர் பணிகள், மற்றும் சாலை பணிகள் என மொத்தம் இதுவரை 16 எண்ணிக்கையிலான பணிகள் மதிப்பீடு தொகை ரூ.5.25 கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 4 பணிகள் நடைபெற்று வருகிறது. 4 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. 8 பணிகள் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் :

## 2022–23

### நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் (அறிவிப்பு எண்: 20

சூரமங்கலம் வார்டு அலுவலகம் ஜாகிர் அம்மாபாளையம் பகுதியில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 27.11.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்படியான இடத்தில் பணிகள் செயல்படுத்த ஏதுவான சூழ்நிலை இல்லாத காரணத்தால் தற்போது பள்ளப்பட்டி பகுதியில் பணி மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

### பனமரத்துப்பட்டி ஏரியைச் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் – (அறிவிப்பு எண்: 26)

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான 2137.92 ஏக்கர் பரப்பளவில், 168.128 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பனமரத்துப்பட்டி ஏரியின் நீரினை சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீராக வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் திருவாளர்கள் CS Associates, Salem நிறுவனத்தை திட்ட ஆலோசகராக நியமனம் செய்து மதிப்பீடு தொகை ரூ.54.00 கோடிக்கு திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 2024–25

### மாணாக்கர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய வகையில் அறிவியல் பூங்கா அமைக்கப்படும். (அறிவிப்பு எண்.5)

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.09இல் வர்மா கார்டன் பகுதியில் 2024 – 25 ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மானிய நிதியின் கீழ் அறிவியல் பூங்கா மதிப்பீடு தொகை ரூ.3.22 கோடியில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 30.12.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்காக தற்போது ரூ.1.38 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## குடிநீர் விநியோகம்

சேலம் மாநகராட்சியில் உள்ள 60 கோட்டங்களில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேட்டூர் அணையில் இருந்து, மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி 134 எம்.எல்.டி. குடிநீரும் மற்றும் நங்கவள்ளி குடிநீர் திட்டத்தின் மூலம் 13.00 எம்.எல்.டி குடிநீரும் ஆக மொத்தம் 147.00 எம்.எல்.டி குடிநீர் பெறப்பட்டு 3 நாட்களுக்கு ஒரு முறை 28 வார்டுகளிலும் மற்றும் 3 நாட்களுக்கு மேல் 38 வார்டுகளிலும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாநகரில் நாளது தேதிவரை 120171 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாநகர பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 3052 எண்ணிக்கையிலான ஆழ்துளைக் கிணறுகளில், 540 எண்ணிக்கையிலான கை பம்புகளும், 631 எண்ணிக்கையிலான விசைப் பம்புகளும் மற்றும் 1890 எண்ணிக்கையிலான சிறுவிசை பம்புகளும் பொருத்தப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் தினந்தோறும் 3.72 எம்.எல்.டி. தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

## தனிக்குடிநீர் திட்டம் பராமரிப்பு

சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் சிப்பம் 1 முதல் 5 வரையிலான பணிகள் (நிலை–1) ஆற்று நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், கோம்புரான்காடு நீர் உந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் மோட்டார்கள் பராமரிப்பு, தொட்டில்பட்டி நீரேற்று நிலையம் முதல் மாநகராட்சி எல்லை வரை உள்ள வழியோர குடிநீர் குழாய்கள், வால்வுகள் பராமரிப்பு மற்றும் இதர குடிநீர் சம்பந்தப்பட்ட பணிகளை இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிபந்தனைகள்படி பணிகளை தங்கு தடையின்றி தொடர்ந்து மேற்கொள்ள நிர்வாக நலன் கருதி மெசர்ஸ். பி.எஸ்.என் & கோ, மேட்டூர் நிறுவனத்தின் மூலம் பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

## மாநகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறு மற்றும் மோட்டார் பராமரிப்பு பணிகள்

சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 14 வார்டுகளில் உள்ள 610 ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்குண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.42.50 இலட்சம் மதிப்பீட்டில் 15.01.2026 வரை மேற்கொள்ள M/s.TCK Trade India, Namakkal என்ற ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அடுத்த ஆறு மாதங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு **30.01.2026** ஆம் தேதியன்று M/s. J.P. Construction, Namakkal என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட **14** வார்டுகளில் உள்ள **523** ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்குண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.**29.90** இலட்சம் மதிப்பீட்டில் **15.01.2026** வரை மேற்கொள்ள M/s.TCK Trade India, Namakkal என்ற ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது. அடுத்த ஆறு மாதங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற்று **30.01.2026** ஆம் தேதியன்று M/s. J.P. Construction, Namakkal என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட **16** வார்டுகளில் உள்ள **876** ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்குண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.**33.00** இலட்சம் மதிப்பீட்டில் **15.01.2026** வரை மேற்கொள்ள M/s. K3 Associates India Private Limited ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

அடுத்த ஆறு மாதங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு **30.01.2026** வரை மேற்கொள்ள M/s. K3 Associates India Private Limited ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட **16** வார்டுகளில் உள்ள **640** ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார்கள், கம்பரஸர்கள் மற்றும் நீர்மூழ்கி மோட்டார்களின் பழுதினை சரி செய்தல், HDPE டேங்குகளை சுத்தம் செய்தல் மற்றும் அதற்குண்டான பைப்லைன்களில் ஏற்படும் தண்ணீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை ஆறு மாதங்களுக்கு உடனுக்குடன் பழுது நீக்கி, பராமரிப்பு பணிகள் ரூ.**44.50** இலட்சம் மதிப்பீட்டில் **15.01.2026** வரை மேற்கொள்ள M/s. JP Construction, Namakkal என்ற ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

அடுத்த ஆறு மாதங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு **30.01.2026** ஆம் தேதியன்று M/s. J.P. Construction, Namakkal என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பராமரிப்பு பணிகள்**

சேலம் மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களுக்குட்பட்ட 60 கோட்டங்களில் உள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்க தாமதம் ஆகிறது.

எனவே, இதனை தவிர்க்க அனைத்து கோட்டங்களிலும் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள் ஆகியவற்றின் பழுது பணியை போர்க்கால அடிப்படையில் சரி செய்ய வேண்டி உள்ளது.

குடிநீர் வீணாகாமல் பழுது பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றி முடித்து தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக இப்பணிகளை மேற்கொள்ள, சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 14 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை ரூ.49.50 இலட்சத்தில் (01.09.2025 முதல் 31.08.2026 வரை ) ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள M/s. JP Construction, Namakkal என்ற ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 14 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை ரூ.48.00 இலட்சத்தில் (01.09.2025 முதல் 31.08.2026 வரை ) ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள திரு.சுவேதலட்சுமி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 16 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை ரூ.49.00 இலட்சத்தில் (01.09.2025 முதல் 31.08.2026 வரை ) ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள திரு.சுவேதலட்சுமி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட 16 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களின் பழுது பணியை அவ்வப்போது வார்டு அலுவலகத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### மழைநீர் சேகரிப்பு திட்டம்

சேலம் மாநகராட்சி பகுதியில் உள்ள 215722 எண்ணிக்கையிலான வரி விதிப்புகளில் நாளது தேதி வரை 191256 எண்ணிக்கையிலான வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் 165896 எண்ணிக்கையிலான வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு நல்ல நிலையில் உள்ளது. 25360 எண்ணிக்கையிலான வீடுகளில் மழைநீர் சேகரிப்பு உள்ள போதிலும், புனரமைப்பு வேண்டிய நிலையில் உள்ளது. புனரமைப்பு செய்யக் கோரி சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

புதியதாக மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள் அமைக்க வேண்டியுள்ள 24466 எண்ணிக்கையிலான வீடுகளுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்க கோரி, அறிவிப்பு நோட்டிஸ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைப்பு செய்து நிலத்தடி நீர் மட்டம் உயர விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அம்ரூத் 2.0 திட்டம் – (2023–24)

2023 – 24 ஆம் ஆண்டு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.37ல் குமரகிரி ஏரி பகுதியில் 1 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.463.00 இலட்சத்திற்கு, ஒப்பந்தப்புள்ளி கோரி 12.03.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

### மாநகராட்சி நிதி
### பொது நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்

2024–25 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.2268.57 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 159 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ. 810.19 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 88 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 40 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 48 பணிகள் நடைபெற்று வருகிறது.

### குடிநீர் நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்

2024–25 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.1717.92 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 143 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ. 787.74 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 51 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 44 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 7 பணிகள் நடைபெற்று வருகிறது.

## கல்வி நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்

2024–25 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் ரூ.227.15 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 11 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.




2025–26 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி கல்வி நிதியின் கீழ் ரூ.245.60 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 14 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 2 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகிறது.

## மாநகராட்சியின் அலுவலக வாகனங்களின் எரிபொருள் செலவினம்

சேலம் மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் நான்கு வார்டு அலுவலகங்களின் அலுவலர்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 21 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு சராசரியாக எரிபொருள் செலவினங்கள் மாதந்தோறும் ரூ.6.28 இலட்சங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

## புதிய வாகனங்கள் வாங்கப்பட்டது

சேலம் மாநகராட்சிக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்ட 18 வாகனங்களில் 11 வாகனங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ள நிலையில் புதியதாக 7 வாகனங்களை (GeM Portal) ஜெம் விலை விகிதப்படி ஸ்கார்பியோ–1 எண்ணிக்கை ரூ.22.00 இலட்சம் மற்றும் பொலீரோ–3 எண்ணிக்கைகள் ரூ.60.00 இலட்சம் ஆக மொத்தம் 4 வாகனங்களுக்கு ரூ.82.00 இலட்சத்திற்கு பெறப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள்

**2023 – 24** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் மாநகராட்சி பள்ளிகளில் பராமரிப்பு பணிக்காக ரூ.**625.00** இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் **20** எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, அனைத்து பணிகளும் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது.

**2024 – 25** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் மாநகராட்சி பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிக்காக ரூ.**219.00** இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் **9** எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

**2024 –2025** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் மாநகராட்சி பள்ளிகளில் பராமரிப்பு பணிக்காக ரூ.**194.00** இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் **17** எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

**2024 – 2025** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிக்காக (நிலை – III) ரூ.**112.00** இலட்சம் மதிப்பீட்டில் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.**43**இல் புது தெரு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி (**8** எண்ணிக்கையிலான வகுப்பறைகள் கட்டும் பணி) எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

**2025 – 2026** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண்.**35** இல் இந்திரா காந்தி உயர்நிலை பள்ளி பராமரிப்பு பணிகள் மதிப்பீடு தொகை ரூ.**69.00** இலட்சத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

**2025 – 2026** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியத்தின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பள்ளி கட்டிடங்களின் பராமரிப்பு பணிகள் **26** எண்ணிக்கையில் மதிப்பீடு தொகை ரூ.**2.76** கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, **2.6.2025** ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, அனைத்து பணிகளும் முடிவுறும் தருவாயில் உள்ளது.

## சாலைகள்

சேலம் மாநகராட்சியில் நாளது தேதியில் கீழ்கண்டுள்ள விபரப்படி மொத்தம் 7731 எண்ணிக்கையிலான சாலைகள் 1037.173 கி. மீட்டர் நீளத்திற்கு பராமரிக்கப்படுகிறது.மாநகராட்சிகளில் பராமரிக்கப்படும் அனைத்து சாலைகளையும் காலமுறை பயன்பாட்டின்படி சீரான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், மண்சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றம் செய்திட கீழ்கண்டுள்ளவாறு சாலைகளை தரம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சாலைகளுக்கும் ஒரு குறியீட்டு எண் (Unicode) வழங்கப்பட்டு சாலைப்பதிவேடுகள் (Road Ledger) தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக நகர்ப்புற சேவை உட்கட்டமைப்பு இணையதளத்தில் (UTIS) பதிவேற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

## 2024–25 சாலைப்பணிகள்

2024 –25 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (TURIP), நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (NSMT) மற்றும் 15வது மத்திய நிதிக் குழு மான்ய நிதி (15th CFC) ஆகிய திட்டங்களின் கீழ் மொத்தம் 658 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் 98.093 கி. மீட்டர் நீளத்திற்கு மதிப்பீடு தொகை ரூ.38.43 கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தற்போது அனைத்து சாலைப் பணிகளும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## 2025–26 சாலைப்பணிகள் – TURIP - Damage Road

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (TURIP), சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.12.95 கோடிக்கு 27.139 கி.மீ நீளத்திற்கு 141 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, நாளது தேதியில் 106 எண்ணிக்கையிலான சாலை பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (TURIP-II), சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.7.59 கோடிக்கு 14.137 கி.மீ நீளத்திற்கு 71 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 28.01.2026 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## SFC - Damage Road

மாநில நிதிக்குழு மான்யத்தின் கீழ் சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.11.56 கோடிக்கு 15.517 கி.மீ நீளத்திற்கு 114 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, நாளது தேதியில் 75 எண்ணிக்கையிலான சாலை பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

## 15th CFC - Damage Road

15வது மத்திய நிதிக் குழு மான்ய நிதியின் கீழ் சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.5.23 கோடிக்கு 10.527 கி.மீ நீளத்திற்கு 79 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அனைத்து சாலைப்பணிகளும் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## Special Fund - Damage Road

சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் சாலை மறுசீரமைப்பு பணிகளுக்கான (Damage Road) மதிப்பீடு தொகை அரசு மானியம் ரூ.12.52 கோடிக்கு 20.976 கி.மீ நீளத்திற்கு 135 எண்ணிக்கையிலான சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, நாளது தேதியில் 118 எண்ணிக்கையிலான சாலை பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

## 15 வது மத்திய நிதிக் குழு நிதி (15th CFC) – 2024-25

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட சுப்பரமணியம் நகரில் மதிப்பீடு தொகை ரூ.1.50 கோடிக்கு புதியதாக நகர்ப்புற சுகாதார வளாகம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, 30.1.2025 ஆம் தேதியன்று பணி ஆணை பணிகள் நடைபெற்று வருகிறது.

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்.40ல் அண்ணா மருத்துவமனை வளாகம் மற்றும் கோட்டம் எண்.42ல் கிச்சிப்பாளையம் ஆகிய பகுதிகளில் தலா ரூ.0.60 கோடி வீதம் மதிப்பீடு தொகை ரூ.1.20 கோடிக்கு கூடுதல் நகர்ப்புற சுகாதார வளாகம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 30.12.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, ஒரு பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது

**15 வது மத்திய நிதிக் குழு நிதி (15th CFC) 2025-26**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.25 இல் பள்ளப்பட்டி நகர்ப்புற சுகாதார வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி மதிப்பீடு தொகை ரூ.75.00 இலட்சத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 08.07.2025 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

**மூலதன மான்ய நிதி (CGF) – 2021 -22**

மூலதன மான்ய நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்: 5–ல் அழகாபுரம் பெரிய புதூர் பகுதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் ஒப்பந்ததாரர் குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்காத காரணத்தால் ஒப்பந்ததாரரின் பணி ஆணையினை ரத்து செய்யப்பட்டு மறுஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளது.

அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண்: 35–ல் ஜோதி டாக்கீஸ் பகுதியில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் ஒப்பந்ததாரர் குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்காத காரணத்தால் ஒப்பந்ததாரரின் பணி ஆணையினை ரத்து செய்யப்பட்டு, மறுஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

2023 – 24 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட (மூக்கனேரியை அழகுபடுத்தும் பணி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (I & A) திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது), மூக்கனேரியில் இருந்து வெளியேறும் உபரிநீர் ஓடை வழியாக திருமணிமுத்தாறை வந்து சேருகிறது. இந்த கால்வாயை மறுசீரமைப்பு செய்யும் பணி ரூ.11.07 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்காக தற்போது ரூ. 5.56 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தம் 1622 மீட்டர் நீளம், தற்போது 1120 மீட்டர் நீளத்திற்கு கால்வாய் சீரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

**ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் நிதி (Health and Hygine)**

2023 – 2024 ஆம் ஆண்டு ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.25ல் பள்ளப்பட்டி பகுதியில் புதிய உணவு தெரு (New Food Street) அமைக்க மதிப்பீடு தொகை ரூ.3.00 கோடிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 30.01.2024 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.





**2023 –2024 நகர்புற துணை சுகாதார வளாகம் (NUHM)**

2023– 2024 ஆம் ஆண்டு தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் 12 எண்ணிக்கையிலான துணை சுகாதார மையங்கள், 4 எண்ணிக்கையிலான கூடுதல் நகர்ப்புற ஆரோக்கிய நல மையங்கள் மற்றும் ஒரு புதிய நகர்ப்புற சுகாதார நல மையம் என மொத்தம் 17 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.720.00 இலட்சத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, 11.10.2023 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கப்பட்டு, 12 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டு, 2 பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள 3 பணிகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**நூலகம் மேம்பாடு**

2023 – 2024 ஆம் ஆண்டு மூலதன மானிய சிறப்பு நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.20ல் உள்ள பழைய சூரமங்கலம் நூலகம் மற்றும் அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.14ல் உள்ள மாவட்ட மத்திய நூலகம் ஆகியவற்றை புதுப்பிக்கும் பணிகள் மதிப்பீடு தொகை ரூ.0.44 கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**முதல்வர் படைப்பகம்**

2025–2026 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகம் புதிய பேருந்து நிலையத்தில் மதிப்பீடு தொகை ரூ.99.00 இலட்சத்தில் முதல்வர் படைப்பகம் அமைக்க 22.7.2025 ஆம் தேதியன்று பணி ஆணை வழங்கி பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது.

### சாலை ஒட்டுமான பணிகள்

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவுப்படி 2025–2026 ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் வார்டு அலுவலகத்திற்கு தலா ரூ.25.00 இலட்சம் வீதம் நான்கு வார்டு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் ஏற்படும் பள்ளங்களை ஒட்டுமானம் செய்ய ஒரு ஆண்டிற்கு (Patches / Potholes) மதிப்பீடு தொகை ரூ.100.00 இலட்சத்திற்கு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

### தினசரி நாளங்காடி கட்டுதல்

2025–2026 ஆம் ஆண்டு ஊக்க நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.28 செவ்வாய்பேட்டை பால் மார்க்கெட் தினசரி நாளங்காடி புனரமைப்பு செய்யும் பணி மதிப்பீடு தொகை ரூ. 5.05 கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 22.10.2025 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

### மழைநீர் வடிகால் அமைத்தல்

2024–2025 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதியின் சேமிப்பு தொகை ரூ.5.22 கோடி மற்றும் 2025–2026 ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதியின் கீழ் ரூ.14.55 கோடி ஆக மொத்தம் ரூ. 19.77 கோடிக்கு நான்கு வார்டு அலுவலக பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மொத்தம் 21 சிப்பங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு 05.11.2025 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

TNCRUDP ஊக்கத் தொகை நிதியின் கீழ் சூரமங்கலம் வார்டு அலுவலக பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.3.15 கோடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது.

### கிறிஸ்தவர்களுக்கான கல்லறை தோட்டம் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பணி

2025 – 2026 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலன் கருதி கிறிஸ்தவர்களுக்கான கல்லறை தோட்டம், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ரூ.9.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன் விவரங்கள் முறையே,

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண். | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.47ல் பென்சன் லைன் கிராஸ் ரோடு பகுதியில் உள்ள கல்லறை தோட்டத்திற்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | 3.50 |
| 2. | சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண்.1ல் ஜாகீர்ரெட்டிப்பட்டி மாமாங்கம் பகுதியில் அமைந்துள்ள கபர்ஸ்தான்களுக்கு கம்பி வேலி அமைக்கும் பணி. | 5.50 |

மேற்படியான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

**மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைந்த துணை சேவை மையம் அமைத்தல்**

2025 – 26 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைந்த துணை சேவை மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட கட்டிடங்களை பழுது நீக்கி புதுப்பித்தல் பணி மேற்கொள்ளுவதற்கு சேலம் மாநகராட்சிக்கு ரூ.16.50 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்காக கீழ்கண்டுள்ள 2 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கையில் உள்ளது.

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண். | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | சூரமங்கலம் மண்டல பகுதியில் இயங்கி வரும் அலுவலக கட்டிடத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காக ஓரிட சமூக பாதுகாப்பு மையம் அமைத்தல் | 10.50 |
| 2. | அஸ்தம்பட்டி மண்டல குமாரசாமிப்பட்டி ராம் நகர் பகுதியில் உள்ள பள்ளி கட்டிடத்தில் மாற்றுத் திறனாளிகளுக்காக ஓரிட சமூக பாதுகாப்பு மையம் அமைத்தல் | 6.00 |

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி நிதி**

2025 – 26 ஆம் ஆண்டு ஈரோடு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் (திரு.அந்தியூர். பி. செல்வராஜ்) அவர்களால் சேலம் மாவட்டத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட பணிகளின் கீழ் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண். 06 வர்மா கார்டன் பகுதி – 2 சாலை மறுசீரமைப்பு பணிகள் மதிப்பீடு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி 06.02.2026 ஆம் தேதியன்று கோரப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட நிதி

சேலம் மாநகராட்சி 2024–2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் நான்கு வார்டு அலுவலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 27 எண்ணிக்கையிலான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி மையங்களில் புதியதாக தலா ஒரு கழிப்பறை கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.9.72 இலட்சத்திற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி ஆணை வழங்கி, 5 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 22 பணிகள் நடைபெற்று வருகிறது.







சேலம் மாநகராட்சி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் நான்கு வார்டு அலுவலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி மையங்களில் பராமரிப்பு பணிக்கு தலா ஒரு மையத்திற்கு ரூ.36,000/– வீதம் 13 எண்ணிக்கையிலான மையங்களுக்கு மதிப்பீடு தொகை ரூ.4.68 இலட்சத்திற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 6 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது, மீதமுள்ள 7 பணிகளுக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையில் உள்ளது.

## 2025–2026 ஆம் ஆண்டு நகர்ப்புற சீர்திருத்தங்களுக்கு சிறப்பு நிதிஉதவி வழங்கும் (SASCI) திட்டம்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 102 கிணறுகள் புனரமைத்து பராமரிப்பு செய்யும் பணியை நகர்புற சீர்திருத்தங்களுக்கு சிறப்பு நிதிஉதவி வழங்கும் (SASCI) திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, நான்கு வார்டு அலுவலக பகுதிகளிலும் தலா ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளில் தூர்வாரி தூய்மை செய்தல், பழுது பார்த்தல், நீர் பம்பிங் செய்தலுக்கான பணி மேற்கொள்ளுதல், கிணற்றின் சுற்று சுவர் பெயிண்டிங் செய்தல், தண்ணீர் தரப்பரிசோதனை செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கிணறுகளின் புகைப்பட நகல்கள், தண்ணீர் தரப்பரிசோதனை அறிக்கை, கிணறுகளின் அமைவிடம் குறித்த விபரங்கள் ஆகியவை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியின் பனமரத்துப்பட்டி ஏரியில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பினை சமன் செய்து, வனத்துறையினருடன் இணைந்து நாவல், நீர்மதி, படாம், பலா, புங்கன், வேம்பு, புளியம் மற்றும் இலுப்பை போன்ற பயன் தரும் 15,000 மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## தெரு விளக்கு பராமரிப்பு

சேலம் மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 43986 எண்ணிக்கையில், கீழ் கண்டுள்ள விபரப்படியான தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | விளக்குகள் விபரங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் (தெருவிளக்குகள் 20666 மற்றும் அலுவலகத்தில் உள்ளவை 2,291) | 22957 |
| 2 | 30 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 728 |
| 3 | 40 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 1900 |
| 4 | 60 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 4269 |
| 5 | 90 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் | 12909 |
| 6 | 200 வாட்ஸ் எல்.இ.டி உயர்மின் கோபுர விளக்குகள் | 297 |
| 7 | 150 வாட்ஸ் எல்.இ.டி உயர்மின் கோபுர விளக்குகள் | 22 |
| 8 | 120 வாட்ஸ் எல்.இ.டி அலங்கார தெரு விளக்குகள் | 904 |
| | **மொத்தம்** | **43986** |

மாநகராட்சி பகுதிகளில் உள்ள 40 வாட்ஸ் குழல் வடிவிலான தெருவிளக்குகளுக்கு பதிலாக புதிய 20 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகளாக பொருத்திடவும், அதற்கான மின்சேமிப்பு உபகரணங்களை பொருத்திடவும், தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த மின்சேமிப்பு திட்டத்தின் கீழ் (ESCO) ரூ.24.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் 60 கோட்டங்களில் உள்ள 2,551 எண்ணிக்கையிலான தெருவிளக்கு சுவிட்ச் பாக்ஸ்கள் அனைத்தும் தானியங்கி மின்சேமிப்பு சுவிட்ச் பாக்ஸ்களாக (Street Light Controller) மாற்றப்பட்டுள்ளது.

சேலம் மாநகர பகுதிகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகளும் மின்சாரம் சேமிக்கும் பொருட்டு நாளது தேதியில் எல்.இ.டி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள் ஒளிர்வதை கண்காணிப்பதற்கு மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் தெருவிளக்கு கட்டுப்பாட்டு அறை (Central Control Monitoring Center) நிறுவப்பட்டு, தெருவிளக்குகளின் செயல்பாடுகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

தெருவிளக்குகள் பயன்பாட்டிற்காக இத்திட்டத்தின் மூலம் நாளது தேதியில் **60.47** சதவீதம் மின்சேமிப்பு கிடைக்கப்பெற்று ஆண்டுக்கு சராசரியாக ரூ.**4.00** கோடி ரூபாய் மின்கட்டணம் சேமிக்கப்படுகிறது.



**2022–2023** ஆம் ஆண்டு **15**வது நிதி குழு மான்யத்தின் கீழ் தெரு விளக்கு தேவைப்படும் இடங்களில் புதியதாக மின்கம்பங்கள், புதைவட கேபிள்களுடன் கூடிய எல்.இ.டி தெருவிளக்கு **800** எண்ணிக்கையில் அமைக்கும் பணிக்கு ரூ.**8.27** கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**2025 – 2026** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், நான்கு வார்டு அலுவலகங்களுக்கு உட்பட்ட **60** கோட்டங்களில் தெரு விளக்கு இல்லாத பகுதிகளில் **883** எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் புதியதாக அமைக்க ரூ.**77.05** இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து, ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையில் உள்ளது.

### பூங்காக்கள் அபிவிருத்தி பணி

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் நடைபாதை, சுற்றுசுவர், இணைப்பு வேலி அமைத்தல், மின் விளக்குகள் பொருத்துதல், குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல், கிரானைட் பெஞ்ச் அமைத்தல், பாதுகாப்பு அறை மற்றும் பிரதான வாயில் அமைத்தல், கூடுதல் நீர் வியோகத்துடன் கூடிய போர்வெல் அமைத்தல், பசுமையான புல் தரைகள் அமைத்தல், “**8**” நடைபாதை அமைத்தல், மூலிகை மருத்துவ தோட்டக்கலை அமைத்தல், யோக செட் அமைத்தல், CCTV காண்காணிப்பு கேமரா பொருத்துதல், மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள **35** எண்ணிக்கையிலான பூங்காக்களுக்கு மதிப்பீடு தொகை ரூ.**17.57** கோடிக்கு திட்ட பிரேரனைகள் தயார் செய்யப்பட்டு, அரசின் நிதி கோரி சமர்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறும் நடவடிக்கையில் உள்ளது. விரைவில் நிதி ஒதுக்கீடு பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

## புதிய மண்டல அலுவலகம் கட்டுதல்

சேலம் மாநகராட்சி வார்டு அலுவலகங்களில் அந்தந்த கோட்டங்களுக்கு உண்டான பணிகள் உதவி ஆணையாளர் மற்றும் செயற்பொறியாளர் தலைமையில் மேற்கொள்ளப்படுகிறது. வார்டு அலுவலகங்களில் பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுப் பிரிவு, சுகாதார பிரிவு, நில அளவை பிரிவு, தணிக்கை பிரிவு மற்றும் பதிவேடு இருப்பு அறை ஆகிய பிரிவுகளுக்கு போதிய இட வசதி இல்லாமல் இயங்கி வருகின்றன. மேலும் அலுவலர்கள், வார்டு அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்கள் ஆகியோர்களின் வாகனங்களை நிறுத்த இட வசதியே இல்லை. எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய 3 வார்டு அலுவலகம் கட்டுவதற்கு கீழ்கண்டுள்ள விவரப்படி ரூ.15.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கபெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ரூ.கோடியில்)

| வ.எண். | வார்டு அலுவலகம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | சூரமங்கலம் வார்டு அலுவலகம் | ரூ. 5.00 |
| 2. | அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் | ரூ. 5.00 |
| 3. | அம்மாபேட்டை வார்டு அலுவலகம் | ரூ. 5.00 |
| | மொத்தம் | ரூ. 15.00 |

## சந்தைப்பேட்டை வணிக வளாகம்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.28ல் அமைந்துள்ள சந்தைப்பேட்டை பகுதியானது சேலம் மாநகரில் உள்ள வணிக பொருட்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்திட ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

செவ்வாய்பேட்டை சந்தப்பேட்டை பகுதியில் ஏற்கனவே 1990ஆம் ஆண்டு முந்தைய சேலம் நகராட்சி பகுதியில் வணிக பயன்பாட்டிற்காகவும் மற்றும் வருவாய் அதிகப்படுத்தும் நோக்கத்தை கருத்தில் கொண்டு 30 கடைகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் அக்கடைகள் 30 ஆண்டுகளுக்கு மேல் நிறைவுச் செய்ததால் பல கடைகளில் உறுதி தன்மையானது இழந்து, மிகவும் பழுது அடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

சேலம் மாநகராட்சி சந்தைப்பேட்டை வணிக வளாகமானது சுமார் 1,00,000 சதுர அடி நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மேலும் பழுதாகிய கடைகளை இடித்து அப்புறபடுத்திவிட்டு புதியதாக கடைகள் கட்ட சுமார் ரூ.60.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படியான நவீன வணிக வளாகம் மூலம் சேலம் மாநகராட்சிக்கு அதிக வருவாய் ஈட்டி நிதி நிலைமையை மேம்படுத்த வாய்ப்பு உள்ளது.

### சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.20 வணிக வளாகம் கட்டுதல்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.20க்கு உட்பட்ட சூரமங்கலம் மெயின் ரோடில் உள்ள சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை வணிக வளாகமானது தீ விபத்து ஏற்பட்டு சேதமடைந்தது. சேதமடைந்த நாளது முதல் வணிக வளாகமானது மிகவும் பலவீனம் அடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதால் மன்றத்தின் அனுமதி பெற்று பாதுகாப்பான முறையில் சேதமடைந்த வணிகவளாகத்தினை இடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

வணிக வளாகத்தில் கடைகள் வாடகைக்கு எடுத்து பிழைப்பு செய்து வந்தவர்கள் மற்றும் லட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் நலன் கருதியும், பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்காகவும் மற்றும் சேலம் மாநகராட்சியின் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய வேண்டியும் அதே இடத்தில் புதிய பொலிவுடனும், நவீன வசதிகளுடனும், பொதுமக்களின் அன்றாட தேவைக்காகவும் சேலம் மாநகராட்சியின் வருவாய் பெருக்க வேண்டியும் புதிய நவீன வணிக வளாகத்தினை கட்டி பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கிட ஏதுவாக தோராய மதிப்பீடு ரூ.6.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண்.44 வணிக வளாகம் கட்டுதல்

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம் கோட்டம் எண்.44க்கு உட்பட்ட கிச்சிப்பாளையம், குகை எருமாபளையம் மெயின் ரோடில் உள்ள சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகமானது மிகவும் பலவீனம் அடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதால் மன்றத்தின் அனுமதி பெற்று பாதுகாப்பான முறையில் சேதமடைந்த வணிகவளாகத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதிய நவீன வணிக வளாகத்தினை கட்ட தோராய மதிப்பீடு ரூ.2.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### புதிய சமுதாய கழிப்பிடம் கட்டுதல்

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.12ல் அம்மன் நகர் பகுதியில் மற்றும் கோட்டம் எண்.29ல் வெங்கடப்பன் ரோடு அம்மா உணவகம் அருகில், சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.22ல் சிவதாபுரம், அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.37ல் என்.ஜி.ஜி.ஓ.காலனி ஆகிய இடங்களில் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டுவதற்கு 2026 – 2027 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### புதிய பேருந்து நிலையம் மேம்படுத்துதல்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் புதிய பேருந்து நிலையமானது 1988 ஆம் ஆண்டு கட்டப்பட்டு இன்று வரை சுமார் 35 ஆண்டுகாலமாக தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளுக்கும் பேருந்து போக்குவரத்தினை அளித்து வருகிறது.

மேலும் புதிய பேருந்து நிலையமானது சுமார் 12 ஏக்கர் பரப்பளவில் 4 நடைமேடைகளுடன் கூடிய 80 நிறுத்தங்களை கொண்ட "A" வகை பேருந்து நிலையமாகும். மேற்படியான புதிய பேருந்து நிலையத்தை மேம்படுத்துவதற்காக மதிப்பீடு தொகை ரூ.10.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### பாதாள சாக்கடைத் திட்டம்

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த எண்.60(டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை, நாள்.23.2.2006ம் தேதியிட்ட அரசாணையின்படி உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.149.39 கோடி மதிப்பீட்டில் 7 சிப்பங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு 1,2,3 ஆகிய மூன்று சிப்பங்கள் 421.67 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. மீதமுள்ள 4, 5, 6 மற்றும் 7 சிப்பங்கள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டது.

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் 4 இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### வெள்ளக்குட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலத்திற்கு உட்பட்ட வெள்ளக்குட்டை பகுதியில் 2.42 ஏக்கர் (Ward-J, Block-19, T.S.No.2/1) பரப்பளவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தினசரி 13 MLDயும், MASP (Modified Activated sludge Process) தொழில் நுட்பத்தில் ரூ.9.96 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது தினசரி 12 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது.

### வண்டிப்பேட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட வண்டிப்பேட்டையில் 2.53 ஏக்கர் (Ward-F, Block-1, T.S.No.45) பரப்பளவில் கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகள் தினசரி 44 MLD FAB (Fluidized Aerobic Bio-Reactor) தொழில் நுட்பத்தில் ரூ.22.86 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதில் தினசரி 2 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது.

### மான்குட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட மான்குட்டை பகுதியில் 2.44 ஏக்கர் (S.F No.24/2 Bodinaicken Patti Village) பரப்பளவில் தினசரி 35 MLD அளவிற்கு, கழிவுநீர் சுத்திகரிப்பு FAB (Fluidized Aerobic Bio-Reactor) தொழில் நுட்பத்தில் ரூ.17.76 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு தற்போது தினசரி 32 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது.

## அணைமேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட அணைமேடு பகுதியில் 1.04 ஏக்கர் (New S.F No.65/2, 66, 65/2, மற்றும் 65/3) பரப்பளவில் தினசரி 6 MLD அளவிற்கு, கழிவுநீர் சுத்திகரிப்பு FAB-MBBR (Moving Bed Bio Reactor) தொழில் நுட்பத்தில் ரூ.5.79 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு தற்போது தினசரி 5 MLD கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது.

மாநகரில் பாதாள சாக்கடை திட்டத்தில் விடுபட்ட பகுதிகளில் சேலம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.111.00 கோடிக்கு மூன்று சிப்பங்களாக 93.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## AMRUT 2.0

## JAL HI AMRIT SCHEME

சேலம் மாநகராட்சியில் 4 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகின்றது. அதன் செயல் திறனை கொண்டு Amrut 2.0 திட்டத்தின் கீழ் JAL HI AMRIT ஊக்கத்தொகை Ministry Of Housing and Urban Affairs அவர்களால் தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினை வைத்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை ஆய்வு செய்து பின்னர் 3 star rating வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மேம்பாட்டிற்காக இந்திய அரசு G.O.(D). No. 386 dated 28.06.2025 படி ரூ.2.75 கோடி ஊக்கத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழங்கப்பட்ட ஊக்கத்தொகையினை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்த சேலம் மாநகராட்சியில் உள்ள அணைமேடு, வெள்ளக்குட்டை மற்றும் மான்குட்டை ஆகிய மூன்று கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு பணிகளுக்காகவும், பழுதடைந்த பாகங்களை மாற்றி புதுப்பித்து STP சிறப்பாக இயங்கும் நிலையில் கொண்டுவருவதற்காக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரும் நடவடிக்கையில் உள்ளது.

## நீர் நிலைகள் மேம்பாடு

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ் கண்டுள்ள விபரப்படியான 12 எண்ணிக்கையிலான நீர் நிலைகள் உள்ளன. இதில் 3 எண்ணிக்கையிலான நீர் நிலைகள் மாநகராட்சிக்கு சொந்தமானது, இதுதவிர மீதமுள்ள 9 நீர்நிலைகள் வருவாய் துறை மற்றும் பொதுபணித்துறைக்கு சொந்தமானது. அதன் விபரங்கள் முறையே,

| வ. எண் | நீர் நிலைகள் விபரம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.கோடி | பரப்பளவு ஏக்கரில் | உரிமை விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | பனமரத்துப்பட்டி ஏரி | – | – | 2139 | சேலம் மாநகராட்சி |
| 2 | குமரகிரி ஏரி | சீர்மிகு நகர திட்டம் | 10.23 | 39.25 | சேலம் மாநகராட்சி |
| 3 | சத்திரம் தெப்பக்குளம் | AMRUT 2.0 | 0.15 | 0.92 | சேலம் மாநகராட்சி |
| 4 | போடிநாயக்கன்பட்டி ஏரி | (I &A) | 19.00 | 20.26 | வருவாய் துறை |
| 5 | மூக்கனேரி | (I &A) | 23.00 | 80.26 | பொதுப்பணித்துறை |
| 6 | அல்லிக்குட்டை | (I &A) | 10.00 | 20.25 | வருவாய் துறை |
| 7 | அம்மாள் ஏரி | AMRUT 2.0 | 0.77 | 8.40 | வருவாய் துறை |
| 8 | பள்ளப்பட்டி ஏரி | சீர்மிகு நகர திட்டம் | 34.50 | 44.38 | வருவாய் துறை |
| 9 | இஸ்மாயில் கான் ஏரி | – | – | 16.19 | வருவாய் துறை |
| 10 | இராமன் குட்டை | – | – | 14.84 | வருவாய் துறை |
| 11 | கொள்ளன் குட்டை | – | – | 3.93 | வருவாய் துறை |
| 12 | சீலாவரி ஏரி | – | – | 21.21 | வருவாய் துறை |

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மொத்தம் 12 எண்ணிக்கையிலான ஏரிகளில் தற்போது 7 எண்ணிக்கையிலான நீர்நிலைகளை புனரமைப்பு மற்றும் மேம்பாடு செய்யும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்கால சந்ததிகள் பயன்பெறும் வகையில் சுற்றுச் சூழல் மாறுபடாமல் பாரம்பரியமாக உள்ள ஏரிகளை மறுசீரமைத்து, மழைநீரை சேகரித்து, நீர் நிலைகள் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் பெருக்கும் நோக்கில் பனமரத்துப்பட்டி ஏரிக்கு ரூ.54.00 கோடிக்கும் மற்றும் இஸ்மாயில்கான் ஏரிக்கு ரூ.42.00 கோடிக்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்ட பிரேரனையை அரசுக்கு அனுப்பி வைத்து உரிய நிதி பெற்று எதிர்வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2025 – 2026 ஆம் நிதியாண்டு அறிவிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம்

| வ. எண் | திட்ட அறிவிப்புகள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1. | செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மை கிடங்கில் சூர்ய சக்தி மின் ஆலை பயன்பாட்டிற்காக ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் 2 எண்ணிக்கையில் மதிப்பீடு தொகை ரூ.250.00 இலட்சத்தில் கட்டும் பணி. | செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பொது நிதியின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.16.80 இலட்சத்தில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டி கட்டப்பட்டுள்ளது. |
| 2. | செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மை கிடங்கில் தீ தடுப்பு பணிக்கான தண்ணீர் மற்றும் குழாய் வசதிகள் மதிப்பீடு தொகை ரூ.90.00 இலட்சத்தில் ஏற்படுத்தும் பணி. | செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மை கிடங்கில் தீ தடுப்பு பணிக்கான தண்ணீர் மற்றும் குழாய் அமைக்க பொது நிதியின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.16.80 இலட்சத்திற்கு பணி ஆணை வழங்கி, பணிகள் நடைபெற்று வருகிறது |
| 3. | அஸ்தம்பட்டி மண்டலத்தில் உள்ள படையப்பா நகர், அம்மாபேட்டை மண்டலத்தில் உள்ள வர்மா சிட்டி ஆகிய இடங்களில் மனைபிரிவு பொது திறந்தவெளி பகுதியில் சிறுவர்களுக்கான ஸ்கேட்டிங் பயிற்சி தளம் மதிப்பீடு தொகை ரூ.100.00 இலட்சத்தில் அமைக்கும் பணி. | அம்மாபேட்டை மண்டலத்தில் உள்ள வர்மா சிட்டி பகுதியில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிதியின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.322.00 இலட்சத்திற்கு அறிவியல் பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| 4. | அஸ்தம்பட்டி மண்டலம் ஜெயராம் காலனி அருகில் உள்ள மனைப்பிரிவு பொது உபயோக நிலத்தில் பெண்களுக்கான பிரத்யோக விளையாட்டு பயிற்சி மையம் மதிப்பீடு தொகை ரூ.150.00 இலட்சத்தில் அமைக்கும் பணி. | இப்பணிகளுக்காக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் இப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 5. | செட்டிசாவடி திடக்கழிவு மேலாண்மை கிடங்கில் திடக்கழிவுகளை சீர்படுத்த செயின் டோசர் இயந்திரம் 1 எண்ணிக்கையில் மதிப்பீடு தொகை ரூ.90.00 இலட்சத்தில் வாங்குதல். | |
| 6. | பாதாள சாக்கடை அடைப்பு பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்யும் பணி Jet Roding Machine 2 எண்ணிக்கையில் மதிப்பீடு தொகை ரூ.90.00 இலட்சத்தில் வாங்குதல். | |

## சீர்மிகு நகரம் (Smart City)

மத்திய அரசின் சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தில் நாடு முழுவதும் தேர்வு செய்யப்பட்டுள்ள 100 நகரங்களில் தமிழ்நாட்டில் சேலம் மாநகராட்சி உள்பட 12 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 31.07.2015 அன்றைய நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசு ஆணை எண்.112ன் படி இத்திட்டத்தினை செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தில் 2–ஆம் கட்ட தேர்விற்காக "நகர அளவிலான கொள்கை திட்ட வரைவு" (City Level Conceptual Plan) தயார் செய்யப்பட்டு 30.06.2016 அன்று மத்திய நகர்ப்புற அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சீர்மிகு நகரம் திட்டத்திற்கு சேலம் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக 20.09.2016 அன்று மத்திய நகர்ப்புற அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டம் சேலம் மாநகராட்சியில் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

### பகுதி அடிப்படையிலான அபிவிருத்தி செய்தல் (Area Based Development)

சேலம் மாநகரில் பகுதி அடிப்படையிலான அபிவிருத்தி செய்தல் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசின் வழிகாட்டுதலின்படியும், சேலம் மாநகர மக்களின் கருத்து வாக்கெடுப்பு மற்றும் திட்ட ஆலோசகரின் தள ஆய்வு மற்றும் தரவுகளின் படியும், பழைய பேருந்து நிலையம், சாலை வடிவமைப்பு மற்றும் மறு வடிவமைப்பு பணிகள், வணிக வளாகங்கள் அபிவிருத்தி, வ.உ.சி. நாளங்காடி புதுப்பித்தல், திருமணி முத்தாறு அபிவிருத்தி திட்டம், போஸ் மைதானம் அபிவிருத்தி பணிகள், மழைநீர் வடிகால் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் வசதி பகுதிகளை உள்ளடக்கி 7.15 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை உள்ளடக்கிய முழுமையான உட்கட்டமைப்புகள் உருவாக்கிட விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்து உரிய அனுமதிகள் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்போது பணிகள் 95 சதவீதம் முடிவுற்றது.

### நகர் முழுமைக்கான திட்டம் (Pan City)

சேலம் மாநகராட்சியில் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் கீழ், நகர் முழுமைக்கும் மின் ஆளுமை மூலம் செயலமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. கணினி மூலம் போக்குவரத்து மேலாண்மையினை கையாளுதல், பாதுகாப்பான வாகன நிறுத்துமிடங்களை அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், தெரு விளக்குகளை கண்காணிப்பு செய்தல் உள்ளிட்ட வசதிகளை கண்காணித்திட ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறை (Integrated Command and Control Centre) அமைத்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

## சீர்மிகு நகரத் திட்டத்தின் – சுருக்கம்

| திட்ட விவரம் | எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| பணிகள் முடிக்கப்பட்டது | 102 | 888.36 |
| செயல்பாட்டில் உள்ள பணிகள் | 01 | 76.64 |
| **மொத்தம்** | **103** | **965.00** |

அதன்படி சேலம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசிடமிருந்து ரூ.490.00 கோடியும் (திட்டங்களுக்கான தொகை ரூ.465.00 கோடி, நிர்வாகம் மற்றும் அலுவலக செலவினத் தொகை ரூ.25.00 கோடி) மாநில அரசிடமிருந்து ரூ.500.00 கோடியும் பெறப்பட்டு, மேற்படி இத்தொகையில் நாளது வரை ரூ.965.41 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.174 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (எம்ஏ–2) துறை, நாள்:01.12.2016–ன்படி, தற்பொழுது 2025–26ம் நிதியாண்டிற்கு கீழ்கண்டுள்ள விவரப்படி புதியதாக தலைவர் மற்றும் இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

| வ. எண் | விபரம் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. **M. பிரதீப் குமார்,** இ.ஆ.ப.,<br>பேரூராட்சிகள் ஆணையாளர்,<br>நகராட்சி நிர்வாக இயக்குநரக வளாகம், சென்னை | தலைவர் |
| 2 | திருமதி. **P.A. பரிமளா செல்வி,**<br>கூடுதல் செயலாளர், நிதித்துறை, சென்னை. | இயக்குநர் |
| 3 | டாக்டர். **M.இளங்கோவன்,** B.V.Sc.,<br>ஆணையாளர், சேலம் மாநகராட்சி | மேலாண்மை இயக்குநர் |
| 4 | திரு. **R. செல்வநாயகம்,** B.E., M.BA.,<br>கண்காணிப்பு பொறியாளர், சேலம் மாநகராட்சி | இயக்குநர் |
| 5 | திரு. **R. தமிழ்வேந்தன்**,எம்.ஏ.,<br>உதவி ஆணையாளர், சேலம் மாநகராட்சி | இயக்குநர் |

மேற்படி பெறப்பட்ட தொகையில் நாளதுவரை ரூ.965.41 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் 2025–26 ம் நிதியாண்டில் முடிக்கப்பட உள்ளதால், மீதமுள்ள தொகை ரூ.24.59 கோடியினை வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

## பொது சுகாதார பிரிவு

### திடக்கழிவு மேலாண்மை விபரம்

சேலம் மாநகராட்சியானது 91.34 ச.கி.மீ பரப்பளவில் நான்கு மண்டலங்களாகவும், 60 கோட்டங்களாகவும் உள்ளன. 2025 ஆம் ஆண்டின் மக்கள் தொகை மதிப்பீட்டின்படி 10,05,943 மக்கள் தொகையையும் 2,34,624 குடியிருப்புகளையும் 26,936 வணிக நிறுவனங்களையும், 8 தினசரி சந்தைகள், 2 பேருந்து நிலையங்கள், தெற்கு இரயில்வே கோட்டம், ஒரு இரயில்வே சந்திப்பு, ஒரு டவுன் இரயில் நிலையம், லீ–பஜார் என்ற பெரிய அளவிலான உணவு தானியங்கள் விற்பனை மையம் மற்றும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்றாகும். மேலும், இம்மாநகருக்கு வெளியூரிலிருந்து தினசரி சுமார் ஒரு இலட்சம் மக்கள் வந்து செல்கின்றனர். இதனால் நாள் ஒன்றுக்கு சுமார் 522 மெ.டன் திடக்கழிவுகள் உருவாகிறது.

### நுண்ணுயிர் உரம்தயாரிக்கும் மையம் (Micro Composting Centre)

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினந்தோறும் 522 மெ.டன் கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 235 மெ.டன் மக்கும் கழிவுகள் உருவாகின்றன. மக்கும் கழிவுகளை செயலாக்கம் செய்ய 34 எண்ணிக்கையிலான நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் செயல்பாட்டில் உள்ளது. இதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 170 மெ.டன் மக்கும் கழிவுகள் செயலாக்கம் செய்யப்பட்டு உரமாக்கப்படுகிறது.




### உலர் கழிவு சேகரிப்பு மையம் (Material Recovery Facilities centre)

சேலம் மாநகராட்சி பகுதிகளில் உருவாகும் உலர்கழிவுகளை செயலாக்கம் செய்ய 7 எண்ணிக்கையிலான உலர் கழிவு சேகரிப்பு மையங்கள் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில் நாளொன்றுக்கு சுமார் 74 மெ.டன் உலர்கழிவுகள் செயலாக்கம் செய்யப்படுகிறது.

## தூய்மை இந்தியா திட்டம் 2.0

### உயிரி எரிவாயு ஆலை (Bio -CNG)

சேலம் மாநகராட்சியில் உற்பதியாகும் மக்கும் கழிவுகள் 34 நுண்ணுயிர் உர தயாரிக்கும் மையங்கள் மூலம் செயலாக்கம் செய்யப்படுகிறது. மீதமுள்ள மக்கும் கழிவுகளை செயலாக்கம் செய்ய செட்டிச்சாவடி பகுதியில் சுமார் 58 கோடி மதீப்பீட்டில் 200 மெ.டன் கொள்ளளவு கொண்ட உயிரி எரிவாயு மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் செயலாக்க மையம் (C & D Waste)

சேலம் மாநகராட்சி பகுதிகளில் தினசரி உருவாகும் கட்டிட கழிவுகளை செயலாக்கம் செய்ய செட்டிசாவடி பகுதியில் சுமார் 3.00 கோடி மதிப்பீட்டில் 50 மெ.டன் கொள்ளளவு கொண்ட கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் செயலாக்க மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### பயோ மைனிங் (Bio - Minig)

சேலம் மாநகராட்சியில் செட்டிசாவடி பகுதியில் அமைந்துள்ள குப்பை கொட்டும் கிடங்கில் உள்ள குப்பைகளை அகற்றி வளமீட்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக 2 ஏக்கர் பரப்பளவில் சுமார் 798 லட்சம் மதிப்பீட்டில் 1,83,450 மெ.டன் கழிவுகள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.



### தூய்மை இந்தியா திட்ட மனிதவளம்

சேலம் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் என மொத்தம் 35 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான ஊதியம் ஆண்டு ஒன்றிற்கு ரூ 73.84 லட்சம் மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டம் IEC நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

### திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் (SWM User Charge)

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணமாக 2025–2026 ஆம் ஆண்டில் ரூ. 10.46 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் செலுத்தாத வணிக நிறுவனங்கள் மற்றும் திருமண மண்டபங்களுக்கு ஏப்ரல் 2025 முதல் ஜனவரி 2026 வரை ரூ.60,68,100 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது.

### திடக்கழிவு மேலாண்மை அபராதம் (Solid Waste Penalty)

சேலம் மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளை மீறும் பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் மீது அபராதம் விதிக்கப்படுகிறது. அதன்படி ஏப்ரல் 2025 முதல் ஜனவரி 2026 வரை ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள் விற்பனை செய்த வணிக நிறுவனங்களுக்குரூ 3,28,650/– அபராதம் மற்றும் திடக்கழிவுகளை தரம் பிரித்து வழங்காத பொதுமக்களுக்கு ரூ.65,550/– அபராதம் விதிக்கப்பட்டது.

### தொழில் வர்த்தக உரிமம் (Trade License)

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்கள் மாநகராட்சியில் வர்த்தக உரிமம் பெற வேண்டும். அதன் படி 2025 – 2026 ஆம் ஆண்டில் தற்போது வரை 21191 எண்ணிக்கையிலான வணிக நிறுவனங்களுக்கு ஆன்லைன் மூலம் உரிமம் வழங்கப்பட்டு ரூ.2,47,66,131/– தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

### நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை இயக்கம்

சேலம் மாநகராட்சியில் வார்டு அலுவலகத்திற்கு 4 குழுக்கள் என 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் நாள்தோறும் பிளாஸ்டிக் உற்பத்தி தொழிற்கூடங்கள், குடோன்கள், கடைகள் ஆகிய இடங்களில் சோதனை நடத்தி வருகின்றனர்.

2025 – 2026 ஆம் ஆண்டில் 1005 கிலோ எடை கொண்ட தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனையாளர்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு ரூ.3,02,450/– அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.



## தெரு நாய்கள் இனப்பெருக்க கட்டுபாட்டு அறுவை சிகிச்சை பணிகள் மற்றும் வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் முகாம்கள் நடத்துதல்

சேலம் மாநகராட்சியில் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த **2** அறுவை சிகிச்சை மையங்கள் செயல்பாட்டில் உள்ளது. அவற்றில் கடந்த **5** ஆண்டுகளில் கீழ்கண்ட விவரப்படி தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| ஆண்டு | ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2021 | 0 | 18 | 50 | 10 | 13 | 2 | 40 | 22 | 46 | 62 | 131 | 303 | 695 |
| 2022 | 158 | 247 | 286 | 210 | 251 | 277 | 126 | 254 | 403 | 522 | 264 | 171 | 3169 |
| 2023 | 296 | 168 | 233 | 254 | 239 | 258 | 315 | 504 | 642 | 689 | 462 | 611 | 4668 |
| 2024 | 650 | 845 | 718 | 754 | 703 | 747 | 943 | 833 | 944 | 1020 | 933 | 1012 | 10102 |
| 2025 | 318 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 151 | 441 | 494 | 504 | 524 | 2432 |
| மொத்தம் | 1422 | 1278 | 1287 | 1228 | 1206 | 1282 | 1424 | 1764 | 2476 | 2784 | 2294 | 2621 | 21066 |

மாநகராட்சி பகுதிகளில் ஒவ்வொரு வாரமும் சிறப்பு வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு **2025–2026** ஆம் ஆண்டில் **3140** தெருநாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.



### தூய்மை பணியாளர்கள் நலத் திட்டப் பணிகள்

சேலம் மாநகராட்சியில் 823 நிரந்தர தூய்மை பணியாளர்களும், 1608 தனியார் தூய்மை பணியாளர்களும் என மொத்தம் 2431 பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

- 823 நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கும் ரூ.12.00 லட்சம் மதிப்பீட்டில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அனைத்து நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கும் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- அனைத்து தனியார் தூய்மை பணியாளர்களுக்கும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தில் தூய்மை பணியாளர் அடையாள அட்டை ஸ்மார்ட் கார்டு வழங்க பதிவு செய்யப்பட்டு தற்போது வரை 600 பணியாளர்களுக்கு அட்டை வழங்கப்பட்டுள்ளது.
- சேலம் மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் உடன் இணைந்து தூய்மை பணியாளர்களின் வாரிசுகளுக்கு அவர்களின் கல்வி தகுதிக்கு ஏற்றவாறு தொழில் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சேலம் மாநகராட்சிக்குட்பட்ட சூரமங்கலம் மற்றும் அஸ்தம்பட்டி மண்டலங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் உடல் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன.

### நகருக்குள் வனம்

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே 18,620 மரக்கன்றுகள் நடப்பட்டும், 2025–2026 ஆம் ஆண்டில் நாளதுவரை 2685 மரக்கன்றுகள் நடப்பட்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், மாநகராட்சி பகுதிகளில் 2026–2027ஆம் ஆண்டில் 25,000 மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.





மேலும், நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம், சுடுகாடு, பூங்காக்கள், நீர் நிலைகள் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடங்கள் போன்றவற்றில் மரக்கன்றுகள் நட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

## டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்துதல்

சேலம் மாநகராட்சியால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளால் நடப்பாண்டில் இக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 2025–2026 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் 2025 முதல் ஜனவரி 2026 வரை 28 நபர்கள் மட்டுமே இந்நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர்.

இம்மாநகராட்சியின் 60 கோட்டங்களுக்கும் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுவினை சார்ந்த 700 DBC பணியாளர்கள் நாள்தோறும் வீடு வீடாக சென்றும், தொழில், வணிக பகுதிகளுக்கு சென்றும் ஆய்வு செய்து கொசுப்புழு வளர்நிலைகளை கண்டறிந்து அழிக்கும் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இம்மாநகராட்சியில் டெங்கு நோய்தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்காக வாகனத்தில் பொருத்தப்பட்ட கொசுப்புகை தெளிப்பான் இயந்திரங்கள் 4 எண்ணிக்கையிலும், கைப்புகை தெளிப்பான்கள் 40 எண்ணிக்கையிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## கிருமிநாசினி மற்றும் இரசாயனங்கள் கொள்முதல் விபரம்

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 10 மெ.டன் பிளிச்சிங் பவுடர், 40 மெ.டன் நீர்த்த சுண்ணாம்புகள் வீதம் 2025–2026 ல் 40 மெ.டன் பிளிச்சிங் பவுடர் ரூ.11.40 இலட்சத்திற்கும், 120 மெ.டன் நீர்த்த சுண்ணாம்புதூள் ரூ.9.15 இலட்சத்திற்கும் பொது நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

டெங்கு நோய் தடுப்பு பணிக்காக கொசு புழுக்களை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு தேவையான பூச்சிக்கொல்லி இரசாயனங்கள் பைரித்திரம் 1000 லிட்டர் ரூ.9.96 இலட்சத்திற்கும் டெமிபாஸ் 1000 லிட்டர் ரூ.6.49 இலட்சத்திற்கும் மாலத்தியான் டெக்னிகல் 2000 லிட்டர் ரூ.13.78 இலட்சத்திற்க்கும் பொது நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நலவாழ்வு மையங்கள்

சேலம் மாநகராட்சியில் தற்போது 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 32 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்கட்டமைப்பு வசதிகள்

2023–2024–ம் நிதி ஆண்டில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா மருத்துவமனை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம் திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது மற்றும் கிச்சிப்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடத்தின் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

தற்போது 2025–2026–ம்நிதி ஆண்டில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளப்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டித்தின் பணிகள் நடைபெற்று வருகிறது.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்ற 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் இடப்பற்றாக்குறையாக உள்ள சுப்ரமணியநகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு புதிய கட்டிடம் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

## நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் (Urban Health Wellness Centre)

2022–2023 ம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் தலா 2 நல வாழ்வு மையங்கள் வீதம் 32 நல வாழ்வு மையங்கள் அமைத்திட சுகாதார திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு, 15–வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் ரூ.8.00 கோடி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் ஒதுக்கீடு பெறப்பட்டு 32 எண்ணிக்கையிலான நல வாழ்வு மைய பணிகள் முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. நகர்ப்புற நல வாழ்வு மையம் ஒன்றிற்கு ஒரு மருத்துவ அலுவலர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார பணியாளர்(HI) மற்றும் ஒரு உதவியாளர் என்ற வீதத்தில் பணியாளர்கள் துணை இயக்குநர், சுகாதார பணிகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு நல வாழ்வு மையங்களில் சேவை வழங்கப்பட்டு வருகிறது.




இம்மையங்களில் தினசரி புறநோயாளிகளுக்கு சர்க்கரை, இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் தாய் சேய் நலம் போன்ற அனைத்து மருத்துவ சேவைகளும் தினசரி காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை மற்றும் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை வழங்கப்பட்டு வருகிறது.

## துணை சுகாதார நிலையங்கள் (Health Sub Centre)

சேலம் மாநகராட்சியில் தற்போது 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 60 கோட்ட பகுதிகளும் 84 பகுதிகளாக (SECTORS) பிரிக்கப்பட்டு பொதுமக்களுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தரமான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பு நிதியாண்டில் 2023–2024–ல் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநரகம், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி இம்மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 12 துணை சுகாதார நிலையங்கள் அமைத்திட 15–வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.3.6 கோடி மதிப்பீட்டில் 19.10.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு காமிநாயக்கன்பட்டி, அம்மாசி நகர், சிவதாபுரம், திருவாகவுண்டனூர், அழகாபுரம் புதூர், அண்ணா நகர், ஜவஹர்நகர் மையங்கள் திறக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் பெரமனூர், கோரிமேடு, செல்வாநகர் ஆகிய 3 துணை சுகாதார நிலையங்களும் இந்நாள் வரை பணிகளை மேற்கொள்ளப்படாமல் இருப்பதாலும், வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு போதுமான அளவு இடவசதி இல்லாத காரணத்தினாலும் கட்டிட பணிகள் இரத்து செய்யப்பட்டுள்ளது. தற்போது ஜாரிகொண்டலாம்பட்டி மற்றும் களரம்பட்டி துணை சுகாதார நிலைய கட்டித்தின் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய தர உறுதி சான்று

6 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய சுகாதார திட்டத்தின்கீழ் ஆய்வு மேற்கொண்டு, குறிப்பாக உட்கட்டமைப்பு மற்றும் மருத்துவ சேவைகள், சாதனைகள், குறியீடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய தர உறுதி சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது குகை, அரிசிப்பாளையம், செவ்வாய்பேட்டை மற்றும் பள்ளப்பட்டி ஆகிய 4 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாநில சுகாதார திட்டத்தின் தர உறுதி சான்றிற்கு தேர்வு செய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மக்களைத் தேடி மருத்துவம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு சேலம் மாநகராட்சியில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் “மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தின்கீழ் 10,000 மக்கள் தொகைக்கு 1 மகளிர் தன்னார்வலர் வீதம் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சேவையாற்றிட 84 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் மூலமாக தினசரி 20 குடும்பங்கள் வீதம் நாளதுவரை 7,42,105 நபர்கள் பார்வையிடப்பட்டு அதில் 74,527 சர்க்கரை (DM), 1,59,069 உயர்இரத்த அழுத்தம் (HT), 83,410 இருநோய்(BOTH) உள்ளவர்களை கண்டறிந்து மக்களைதேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டு மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது

## பாலிகிளினிக்

தனியார் மருத்துவமனைக்கு நிகரான சிகிச்சை வழங்க அண்ணா மருத்துவமனை, குமாரசாமிபட்டி, பள்ளப்பட்டி, அன்னதானப்பட்டி மற்றும் தாதகாப்பட்டி ஆகிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்நோக்கு சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அமர்த்தப்பட்டு தினசரி மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

## ராஷ்ட்ரிய பால ஸ்வஸ்திய க்ரியகரம் பள்ளி சிறார் நல வாழ்வு திட்டப் பணிகள் (RBSK)

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சிக்கு 2025–26 ஆம் ஆண்டில் 2 வாகனங்களுடன் கூடிய 2 மருத்துவ குழுக்கள் ஒதுக்கப்பட்டு, பிறந்த குழந்தைகள் முதல் 18 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகள் வரை மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## நலம் காக்கும் ஸ்டாலின்

நடப்பு நிதியாண்டு 2025–2026 நான்கு மண்டலத்திற்கு தலா ஒரு முகாம் வீதம் வருடத்திற்கு நான்கு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை அஸ்தம்பட்டி மற்றும் சூரமங்கலத்தில் முகாம்கள் நடத்தப்பட்டு 2652 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும் அம்மாப்பேட்டை மற்றும் கொண்டலாம்பட்டி மண்டலத்தில் பிப்ரவரி 2026 மாதத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடத்தப்பட உள்ளது.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் தாய் சேய் நல சேவைகள்

சேலம் மாநகராட்சியில் 2024–2025ம் நிதி ஆண்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1148 பிரசவங்கள் மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாநகராட்சியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக சராசரியாக மாதத்திற்கு 92,323 புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய பிரசவ அறிக்கை



குழந்தை பிறந்த அன்றே காசநோய் தடுப்பூசி, மஞ்சள் காமாலை தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்து வழங்கியும் 6வது, 10வது மற்றும் 14வது வாரங்களில் 5 நோய்களுக்கான தடுப்பூசியும் (Pentavalent), வயிற்று போக்கு ஏற்படாமல் இருக்க (ROTA VIRUS) ரோட்டா வைரஸ் சொட்டு மருந்தும் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் மொத்தம் 7884 குழந்தைகளுக்கு மேற்கண்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 வது மாதத்தில் தட்டம்மை தடுப்பூசியுடன் 6711 குழந்தைகளுக்கு IPV ஊசி மருந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம்**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள கருவுற்ற தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் ஊட்டச்சத்தான உணவு உண்ணவும், வருவாய் இழப்பை ஈடுகட்டவும் ஒவ்வொரு கர்பத்திற்கும் ரூ.18,000/– வீதம் முதல் இரண்டு கர்ப்பத்திற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு தலா ரூ.2000/– மதிப்புள்ள ஊட்டச்சத்து பெட்டகம் இரண்டு தவணைகளாகவும், ரூ.6000/– வீதம் முதல் மற்றும் இரண்டு தவணைகளாகவும் ரூ.2000 மூன்றாவது தவணைகளாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சிக்கு 2025–2026 ம் நிதியாண்டில் ரூ. 717.48 இலட்சம் நிதி ஒதுக்கீடாக பெறப்பட்டு, ஜனவரி 2026 வரை 9131 பயனாளிகளுக்கு ரூ.370.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்தொகை பயனாளிகள் வங்கி கணக்குகளுக்கு மாவட்ட கருவூலம் மூலமாக நேரடியாக வரவாக்கப்பட்டு வருகிறது.

- தேசிய குடற்புழு நீக்கும்திட்டம் (NDD) – 2.71 இலட்சம் பள்ளி குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்
- இரத்த சோகை தடுப்புதிட்டம் (IFA) – 1.71 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்
- மாணவிகளுக்கான இலவச நாப்கின்(புதுயுகம்) வழங்கும் திட்டம் – 52,158 மாணவிகள் பயன்பெற்றுள்ளனர்
- வைட்டமின்'A' குறைபாடு சிகிச்சை திட்டம் – 54,622 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்

## நகரமைப்பு திட்டப்பிரிவு

### அனுமதி பெறாத மனைப்பிரிவு / மனைகள் வரன்முறைப்படுத்தும் திட்டம்

அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை ( நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் ( ந.வ.4(3)) துறை நாள் 13.10.2017 ன் படி 20.10.2016 க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைகள் வரன்முறைப்படுத்த உத்திரவு வழங்கப்பட்டு இத்திட்டம் 2017 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சியில் 20.10.2016 க்கு முன்னர் உருவாக்கப்பட்ட 183 அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் அமையப் பெற்ற 7754 மனைகளில் 7234 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

### அனுமதியற்ற மனைப்பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

சேலம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள நான்கு வார்டு அலுவலகங்களில் ஏற்கனவே அபிவிருத்தி அடையப்பெற்று குடியிருப்புகள் நிறைந்த பகுதிகள் அனுமதியற்ற மனைப்பிரிவுகளாக அமைந்துள்ளது. இந்நிலையில் மேற்கண்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4 (3)) துறை நாள் : 04.05.2017. அரசாணை (நிலை) எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4 (3)) துறை நாள்:13.10.2017–ல் அரசாணை வழங்கப்பட்டு மனைவரன்முறை அனுமதி உரிய கட்டணங்கள் செலுத்தி அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

### சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாக்கும் விதமாக கம்பி முள்வேலி அமைத்தல்

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்கள், பூங்காக்கள், காலி திறவிடங்கள், திறந்தவெளி இடங்கள் ஆகியவற்றை பாதுகாக்க தேவையான கம்பி முள்வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேற்கண்ட பணிக்கு நிதியினை மாவட்ட ஆட்சியர் நிதி, அரசு நிதி (பல்வேறுநிதி), மற்றும் மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டுமானங்கள் பல்வேறு நிலையிலான சொத்துக்கள் அனைத்தும் எதிர்காலத்தில் ஆக்கிரமிப்போ அல்லது அத்துமீறல் மற்றும் ஊடுரவல் ஏற்படாத வகையில் எளிதில் அலுவலர்களும், பொது மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் Geographic Information System (GIS) SASCI என்ற புதிய திட்டத்தின் வாயிலாக இடங்களின் அளவீடுகள் மற்றும் எல்லைகளை தெளிவுப்படுத்தியும், மொத்த மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கணினி மயமாக்கப்பட்டு விபரங்களை தெரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கீழே கண்டுள்ள விபரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண். | மண்டலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சூரமங்கலம் மண்டலம் | 405 |
| 2. | அஸ்தம்பட்டி மண்டலம் | 358 |
| 3. | அம்மாபேட்டை மண்டலம் | 295 |
| 4. | கொண்டலாம்பட்டி மண்டலம் | 194 |

**விளம்பர பதாகைகள், மின்ஒளிரூட்டும் விளம்பர பதாகைகள், மின்கம்பங்கள் அமைத்தல்**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 ன் விதி எண்கள் 320 முதல் 338 வரை தெரிவிக்கப்பட்ட விதிகளின்படி சேலம் மாநகரப்பகுதிக்குள், விளம்பரபதாகைகள், மின்ஒளிரூட்டும் விளம்பர பதாகைகள், மின்கம்பங்கள், உயர்மட்ட மேம்பாலங்களில் விளம்பரங்கள் செய்தும், நிரந்திர விளம்பரபலகைகள் அனைத்தையும், அரசு நிர்ணயித்துள்ள வருடாந்திர கட்டணங்கள், சம்மந்தப்பட்ட விளம்பரதாரர்கள் அல்லது உரிமையாளர்கள் சுணக்கமின்றி விடுதலின்றியும், விளம்பரம் செய்து வரும் அளவிற்கு தகுந்தாற் போல் கட்டணத்தை சம்மந்தப்பட்ட மாநகராட்சி நகரமைப்பு பிரிவு மூலம் செலுத்தி உரிய அனுமதி பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

**சுய சான்றின் அடிப்படையில்** (Single Window Portal)

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுரடி வரை பரப்பளவுள்ள மனை இடத்தில் 3500 சதுரடி வரையிலான தரைதளம் (அ) தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய குடியிருப்பு கட்டுமானத்திற்கு சுய சான்றின் அடிப்படையில் (Self Certification) சதுரடிக்கு ரூ.84/–என சேலம் மாநகராட்சிக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணத்துடன் ஒற்றை சாளர முறையில் (Single window portal) இணையவழி (Online) வாயிலாக கட்டிட அனுமதி வழங்குவதற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்கள் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் (ந.நி.1) துறை நாள்.18.07.2024 ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சேலம் மாநகராட்சியில் 18.07.2024 முதல் 31.12.2025 வரை ஒற்றை சாளர முறையில் 891 எண்ணிக்கை விண்ணப்பங்கள் இணைய வழியில் விண்ணப்பம் செய்து ரூ.1186.41 இலட்சம் கட்டணம் செலுத்தப்பட்டு கட்டிட அனுமதி பொது மக்கள் பெற்றுள்ளார்கள். மேலும் அரசாணை எண்.118 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.08.08.2025–ல் சுயசான்றின் அடிப்படையில் இணைய வழி வாயிலாக விண்ணப்பம் செய்யும் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட Stilt + 2 தளங்கள் இரண்டு குடியிருப்புகள் 10 மீட்டர் உயரம் வரை கட்டிக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சி பொதுமக்கள் எளிதில் கட்டிட அனுமதி பெறுவதோடு, மாநகராட்சிக்கு வருவாய் கூடுதலாக கிடைக்கிறது மற்றும் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள, குறிப்பாக ஆரம்ப நிலையிலேயே நடவடிக்கை எடுக்க உதவியாக உள்ளது.

## வருவாய் பிரிவு

வரியினங்கள் (Taxes)

### சொத்து வரி

| | |
|---|---|
| மொத்த வரிவிதிப்புகள் | 2,15,669 எண்ணிக்கைகள் |
| 2025–2026 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ.11600.00 இலட்சங்கள் |
| 2026–2027 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ.16000.00 இலட்சங்கள் |

வருகின்ற நிதி ஆண்டில் நிலுவையில் உள்ள மாநகராட்சி சொத்துவரி உள்ளிட்ட பிற வரி இனங்கள் மற்றும் வரியில்லா இனங்கள் முழுவதும், மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் துணையோடு வசூல் செய்யப்படும். நிலுவையிலுள்ள சொத்துவரி வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வரவும், அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களிலிருந்து மாநகராட்சிக்கு வரவேண்டிய நிலுவை சொத்து வரித் தொகையினை வசூலிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### காலி நிலவரி

| | |
|---|---|
| மொத்த வரி விதிப்புகள் | 17,290 எண்ணிக்கைகள் |
| 2025–2026 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 325.00 இலட்சங்கள் |
| 2026–2027 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 400.00 இலட்சங்கள் |

### தொழில்வரி

| | |
|---|---|
| மொத்த வரி விதிப்புகள் | 28,260 எண்ணிக்கைகள் |
| 2025–2026 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 1400.00 இலட்சங்கள் |
| 2026–2027 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 1700.00 இலட்சங்கள் |

### குடிநீர் கட்டணம் :

| | |
|---|---|
| மொத்த குடிநீர் இணைப்புகள் | 1,20,252 எண்ணிக்கைகள் |
| 2025–2026 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 2300.00 இலட்சங்கள் |
| 2026–2027 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 2600.00 இலட்சங்கள் |

### கேளிக்கை வரி :

| | |
|---|---|
| 2025–2026 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 200.00 இலட்சங்கள் |
| 2026–2027 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 250.00 இலட்சங்கள் |

### மாநகராட்சி கடைகள் :

| | |
|---|---|
| 2025–2026 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 1400.00 இலட்சங்கள் |
| 2026–2027 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 1600.00 இலட்சங்கள் |

## சொத்துகள் மூலம் வரவு
## குத்தகை இனங்கள், ஆண்டு உரிமையாணை இனங்கள்

| | |
|---|---|
| 2025–2026 எதிர்பார்க்கப்படும் வரி வசூல் | ரூ. 1000.00 இலட்சங்கள் |
| 2026–2027 உத்தேசிக்கப்படும் வரி வசூல் | ரூ. 1200.00 இலட்சங்கள் |

### எதிர்பார்க்கப்படும் வருவாய் இனங்கள்

சேலம் மாநகராட்சியில் நிதி ஆதாரத்தை மேம்படுத்த நான்கு வார்டு அலுவலக பகுதிகளில் ஸ்மார்ட் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள கீழ்க்கண்ட பயன்பாட்டில் இல்லாத கட்டிடங்களை உரிய பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்து ஆய்வு செய்ய ஒரு குழுவினை அமைக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கையில் உள்ளது,

(ரூபாய் இலட்சத்தில்)

| வ எண் | அமைவிடம் | வைப்புத் தொகை | எதிர்பார்க்கப்படும் வருவாய் |
|---|---|---|---|
| 1 | கோட்டம் எண் 32 ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் புதிதாக நவீன வசதிகளுடன் கூடிய நேரு கலையரங்கம் | 50.00 | 1000.00 |
| 2 | சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட பள்ளப்பட்டி ஏரி பூங்காவினை இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்திடவும், ஏரி மற்றும் பூங்காவிற்கு வரும் பொது மக்களுக்கான நுழைவுக் கட்டணம் (Entrance Fees) வாகனங்கள் நிறுத்தக் கட்டண வசூல் (Parking Fees) நீளம் மற்றும் அகலம் (சதுரடி 8X10) கடைகள் 6 எண்ணிக்கையில் அமைக்கும் பணி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அமைத்து கட்டண வசூல் செய்யும் உரிமம் | 10.00 | 20.00 |
| | மொத்தம் | 60.00 | 1020.00 |

## கணக்கு பிரிவு

### கட்டுமான தொழிலாளர் நல நிதி :

சேலம் மாநகராட்சியில், சாலைகள், வடிகால், சிறுபாலம் கட்டும் பணி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்காக வழங்கப்படும் செலவின பட்டியலில் ஒரு சதவீதம் கட்டுமான தொழிலாளர் நல நிதி பிடித்தம் செய்யப்படுகிறது.

2025–2026 ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட கட்டுமான தொழிலாளர் நலநிதி தொகை ரூ. 187.43 இலட்சம் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

### மின் கட்டணம் :

2025–2026 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இம்மாநகராட்சியால் செலுத்தப்பட்ட மின் நுகர்வு கட்டணம் விவரம்:–

| வ. எண். | மின் பயன்பாடுகள் | செலுத்தப்பட்ட தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | தெரு விளக்கு, குடிநீர் தொட்டிகள், கட்டிடங்களுக்கான மின் கட்டணம் | ரூ. 4.92 |
| 2 | சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி HT Line | ரூ. 2.98 |
| | **மொத்தத்தொகை** | **ரூ. 7.90** |

### கடன் செலுத்தப்பட்ட விவரம் :

2025–2026 ஆம் நிதியாண்டில் இம்மாநகராட்சியின் தனிக் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், திருமணி முத்தாறு அபிவிருத்தி போன்ற சிறப்பு திட்டப் பணிகளுக்காக அரசு நிதியகங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான அசல் மற்றும் வட்டித்தொகையாக மொத்தம் ரூ.5549.55 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

**ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் :**

சேலம் மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பிரதி மாதம் தேசிய மின்னனு பண பரிவர்த்தனை (National Electronic Fund Transfer) மூலம் சம்மந்தப்பட்ட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக சேர்க்கப்பட்டு வருகிறது.

சேலம் மாநகராட்சியில் மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் 2025 – 2026 ஆம் நிதியாண்டில் ரூ.1779.65 இலட்சம் பணப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் இறக்க நேரிட்டால், ஓய்வூதியர்களின் வாரிசுகளுக்கு குடும்ப பாதுகாப்பு நிதியாக 36 நபர்களுக்கு தொகை ரூ.18.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் 695 ஓய்வூதியர்களும் 642 குடும்ப ஓய்வூதியர்களும் மொத்தம் 1337 நபர்கள் மாதாந்திர ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 2025–26 ஆம் நிதியாண்டில் ரூ.3531.07 இலட்சம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் அரசு ஆணை (நிலை) எண். 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:28.05.2019–ன்படி, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 03.03.2020ம் தேதி முதல் தொடங்கப்பட்டு அதற்குரிய சந்தா தொகை ஒவ்வொரு ஆண்டும் சம்மந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆண்டு சந்தாவாக ரூ.74.78 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

**சேலம் மாநகராட்சியின் பணியாளர்கள், ஓய்வூதியதாரர்கள், தமிழ்நாடு மின்சார வாரிய நிலுவை மற்றும் இதர மொத்த பொறுப்புகள் (Total Liabilities)**

சேலம் மாநகராட்சியில் 01.11.2024 முதல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் சுமார் ரூ.16.81 கோடி நிலுவையில் உள்ளது. அதேபோல் தற்போது பணியாற்றி வரும் பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதித் தொகை (2016–2017 முதல் 2022–2023 வரை உள்ள காலத்திற்கு) ரூ.21.81 கோடியும், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.31.81 கோடியும், மாநகராட்சியின் பங்களிப்பு தொகை ரூ.51.68 கோடியும் என மொத்தம் ரூ.83.49 கோடியும் பணியாளர்கள் கணக்கில் செலுத்த வேண்டியுள்ளது.

மேலும், பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 2019 ஆம் ஆண்டு அகவிலைப்படி நிலுவை, பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.10.80 கோடி, உள்ளாட்சி நிதித் தணிக்கைக் கட்டணம் 3.90 கோடியும், குழுக் காப்பீட்டுத் திட்டம் ரூ.1.15 கோடியும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.148.29 கோடியும், ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.59.66 கோடி மற்றும் இதர நிலுவைகள் உட்பட மொத்தம் ரூ.345.91 கோடி நிலுவையில் உள்ளது.

## சேலம் மாநகராட்சி
## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027

### நிதி வாரியான வரவினங்கள் மற்றும் செலவினங்கள் நிதி நிலைமை

2026–2027 ஆம் நிதி ஆண்டில் மொத்த வருவாய் மற்றும் மூலதன வரவுகள் ரூ.76,641.50 இலட்சம், வருவாய் மற்றும் மூலதனச் செலவுகள் ரூ.80,226.50 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு ரூ.3585.00 இலட்சம் பற்றாக்குறையாக உள்ளது.

### பொது நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| விபரம் | பொது நிதி | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | ஆரம்பக் கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வருவாய் வரவினம் | 48893.00 | 14510.50 | 2152.00 | 65555.50 |
| மூலதன வரவினம் | 9086.00 | 2000.00 | 0.00 | 11086.00 |
| **மொத்தம்** | 57979.00 | 16510.50 | 2152.00 | 76641.50 |
| வருவாய் செலவினம் | 36224.25 | 11180.25 | 29.00 | 47433.50 |
| மூலதன செலவினம் | 26383.00 | 5260.00 | 1150.00 | 32793.00 |
| **மொத்தம்** | 62607.25 | 16440.25 | 1179.00 | 80226.50 |
| **உபரி / பற்றாக்குறை** | - 4628.25 | 70.25 | 973.00 | (-) 3585.00 |

2026 -2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறை நிதியை மாநகராட்சியின் வரி வருவாய் மற்றும் மாநகராட்சியின் சொத்துக்கள் மூலம் வருவாயினை மேம்படுத்தி ஈடுசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.




வருவாய் வரவினம் மூலதன வரவினம்




வருவாய் செலவினம் மூலதன செலவினம்

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
## வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | பொது நிதி | குடி நீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வரவினம் (வருவாய்)** | | | | | |
| வரி வருவாய் | 110 | 7937.00 | 5064.00 | 2112.00 | 15113.00 |
| ஒதுக்கப்படும் வருவாய் | 120 | 1750.00 | 0.00 | 0.00 | 1750.00 |
| குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 130 | 4350.00 | 0.00 | 0.00 | 4350.00 |
| கட்டணம் மற்றும் பயனீட்டு கட்டணம் | 140 | 6136.00 | 4316.00 | 0.00 | 10452.00 |
| விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 150 | 80.00 | 0.50 | 0.00 | 80.50 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 19860.00 | 5000.00 | 40.00 | 24900.00 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 150.00 | 130.00 | 0.00 | 280.00 |
| வட்டி மூலம் வருவாய் | 171 | 120.00 | 0.00 | 0.00 | 120.00 |
| இதர வருவாய் | 180 | 3660.00 | 0.00 | 0.00 | 3660.00 |
| வைப்புத் தொகை (கடைகள்) | 340 | 750.00 | 0.00 | 0.00 | 750.00 |
| நிதி மாற்றம் | 311 | 1000.00 | 0.00 | 0.00 | 1000.00 |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 3100.00 | 0.00 | 0.00 | 3100.00 |
| **மொத்தம்** | | **48893.00** | **14510.50** | **2152.00** | **65555.50** |
| **வரவினம் (மூலதனம்)** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 9086.00 | 0.00 | 0.00 | 9086.00 |
| கடன்கள் | 330 | 0.00 | 2000.00 | 0.00 | 2000.00 |
| **மொத்தம்** | | **9086.00** | **2000.00** | **0.00** | **11086.00** |
| **மொத்த வரவினம் (வருவாய் + மூலதனம்)** | | **57979.00** | **16510.50** | **2152.00** | **76641.50** |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | பொது நிதி | குடி நீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **செலவினம் (வருவாய்)** | | | | | |
| நிறுவனச் செலவுகள் | 210 | 16579.25 | 4545.00 | 0.00 | 21124.25 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 1592.00 | 115.25 | 4.00 | 1711.25 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 10596.00 | 5720.00 | 25.00 | 16341.00 |
| வட்டி மற்றும் நிதிச் செலவுகள் / முதலீடுகள் | 240 | 112.00 | 800.00 | 0.00 | 912.00 |
| திட்டச் செலவுகள் | 250 | 500.00 | 0.00 | 0.00 | 500.00 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 375.00 | 0.00 | 0.00 | 375.00 |
| நிதி மாற்றம் ( குடிநீர் நிதி ) | 290 | 4500.00 | 0.00 | 0.00 | 4500.00 |
| இதர பொறுப்புகள் | 350 | 1970.00 | 0.00 | 0.00 | 1970.00 |
| **மொத்தம்** | | **36224.25** | **11180.25** | **29.00** | **47433.50** |
| **செலவினம் (மூலதனம்)** | | | | | |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 330 | 4000.00 | 1000.00 | 0.00 | 5000.00 |
| நிலையான சொத்துக்கள் | 410 | 22383.00 | 4260.00 | 1150.00 | 27793.00 |
| **மொத்தம்** | | **26383.00** | **5250.00** | **1150.00** | **32793.00** |
| **மொத்த செலவினம் (வருவாய் + மூலதனம்)** | | **62607.25** | **16440.25** | **1179.00** | **80226.50** |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
## வருவாய் கணக்கு வரவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | வரி வருவாய் | 15113.00 |
| 2 | ஒதுக்கப்படும் வருவாய் | 1750.00 |
| 3 | குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 4350.00 |
| 4 | கட்டணம் மற்றும் பயனீட்டு கட்டணம் | 10452.00 |
| 5 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 80.50 |
| 6 | வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 24900.00 |
| 7 | முதலீடுகள் மீதான வருவாய் | 280.00 |
| 8 | வட்டி மூலம் வருவாய் | 120.00 |
| 9 | இதர வருவாய் | 3660.00 |
| 10 | வைப்புத் தொகை | 750.00 |
| 11 | நிதி மாற்றம் | 1000.00 |
| 12 | மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 3100.00 |
| | மொத்தம் | 65555.50 |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
## மூலதன கணக்கு வரவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 9086.00 |
| 2 | கடன்கள் | 2000.00 |
| | மொத்தம் | 11086.00 |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
## வருவாய் கணக்கு செலவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | நிறுவனச் செலவுகள் | 21124.25 |
| 2 | நிர்வாகச் செலவுகள் | 1711.25 |
| 3 | இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 16341.00 |
| 4 | வட்டி மற்றும் நிதிச் செலவுகள் / முதலீடுகள் | 912.00 |
| 5 | திட்டச் செலவுகள் | 500.00 |
| 6 | மானியம் மற்றும் சகாயத் தொகை | 375.00 |
| 7 | நிதி மாற்றம் | 4500.00 |
| 8 | இதர பொறுப்புகள் | 1970.00 |
| | மொத்தம் | 47433.50 |

# வரவு செலவுத் திட்டம்

# 2026 - 2027

## மூலதன கணக்கு செலவுகள்




ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | கணக்கு விளக்கம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | கடன்கள் திரும்ப செலுத்துதல் | 5000.00 |
| 2 | நிலையான சொத்துக்கள் | 27793.00 |
| | மொத்தம் | 32793.00 |

# வரவு செலவுத் திட்டம்
# 2026 - 2027

## பொது நிதி
## வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|
| **ஆரம்ப இருப்பு** | 450 | 9470.09 | | 8280.69 | |
| **வரவினம் (வருவாய்)** | | | | | |
| வரி வருவாய் | 110 | 6765.04 | 8475.00 | 7214.21 | 7937.00 |
| ஒதுக்கப்படும் வருவாய் | 120 | 1172.31 | 1450.00 | 1600.76 | 1750.00 |
| குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள் | 130 | 3390.43 | 4380.20 | 3957.94 | 4350.00 |
| கட்டணம் மற்றும் பயனீட்டு கட்டணம் | 140 | 5107.58 | 6355.20 | 5578.86 | 6136.00 |
| விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | 150 | 65.36 | 90.00 | 67.03 | 80.00 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 14987.98 | 19750.00 | 17981.26 | 19860.00 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 102.65 | 150.00 | 138.74 | 150.00 |
| வட்டி மூலம் வருவாய் | 171 | 86.15 | 100.00 | 94.36 | 120.00 |
| இதர வருவாய் | 180 | 3257.62 | 3450.00 | 3367.32 | 3660.00 |
| வைப்புத்தொகை (கடைகள்) | 340 | 0.00 | 750.00 | 0.00 | 750.00 |
| நிதி மாற்றம் | 311 | 650.00 | 800.00 | 780.00 | 1000.00 |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 3563.41 | 7800.00 | 2726.59 | 3100.00 |
| **மொத்தம்** | | **39148.53** | **53550.40** | **43507.07** | **48893.00** |
| **வரவினம் (மூலதனம்)** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 3652.17 | 8260.00 | 3999.30 | 9086.00 |
| கடன்கள் | 330 | 0.00 | 2000.00 | 0.00 | 0.00 |
| **மொத்தம்** | | **3652.17** | **10260.00** | **3999.30** | **9086.00** |
| **மொத்த வரவினம்** | | **42800.70** | **63810.40** | **47506.37** | **57979.00** |
| **ஆரம்ப இருப்பு + மொத்த வரவினம்** | | **52270.79** | **63810.40** | **55787.06** | **57979.00** |

# வரவு செலவுத் திட்டம்
# 2026 - 2027

## பொது நிதி
## வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு விளக்கம் | முக்கிய குறியீடு | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|
| **செலவினம் (வருவாய்)** | | | | | |
| நிறுவனச் செலவுகள் | 210 | 16303.99 | 15866.50 | 17091.69 | 16579.25 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 1120.00 | 1251.50 | 1128.67 | 1592.00 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 9693.72 | 9761.00 | 9706.30 | 10596.00 |
| வட்டி மற்றும் நிதிச் செலவுகள் / முதலீடுகள் | 240 | 42.97 | 52.00 | 43.50 | 112.00 |
| திட்டச் செலவுகள் | 250 | 0.00 | 500.00 | 0.00 | 500.00 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 42.16 | 1310.00 | 52.92 | 375.00 |
| நிதி மாற்றம் | 290 | 4200.00 | 5000.00 | 4400.00 | 4500.00 |
| இதர பொறுப்புகள் | 350 | 768.06 | 2628.00 | 899.08 | 1970.00 |
| **மொத்தம்** | | **32170.90** | **36369.00** | **33322.16** | **36224.25** |
| **செலவினம் (மூலதனம்)** | | | | | |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 330 | 3565.36 | 4130.00 | 3879.73 | 4000.00 |
| நிலையான சொத்துக்கள் | 410 | 16534.53 | 23613.35 | 18585.17 | 22383.00 |
| **மொத்தம்** | | **20099.89** | **27743.35** | **22464.90** | **26383.00** |
| **மொத்த செலவினம்** | | **52270.79** | **64112.35** | **55787.06** | **62607.25** |
| **உபரி / பற்றாக்குறை** | | | **-301.95** | | **-4628.25** |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
### பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|

**வரவினம் (வருவாய்)**

**வரி வருவாய்**

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|
| 91-110-01-01 | 110 | சொத்து வரி – குடியிருப்பு | 2725.24 | 3200.00 | 2834.25 | 3118.00 |
| 91-431-10-06 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது குடியிருப்பு நிலுவை | 886.15 | 1285.00 | 1040.00 | 1144.00 |
| 91-110-01-03 | 110 | சொத்து வரி – நிறுவனங்கள் | 502.73 | 660.00 | 517.80 | 570.00 |
| 91-431-10-08 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது நிறுவனங்கள் நிலுவை | 175.18 | 204.00 | 198.84 | 219.00 |
| 91-110-01-02 | 110 | சொத்து வரி – வணிகம் | 766.76 | 866.00 | 789.76 | 869.00 |
| 91-431-10-07 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது வணிகம் நிலுவை | 220.57 | 380.00 | 290.66 | 320.00 |
| 91-110-01-04 | 110 | சொத்து வரி – காலியிடம் | 36.95 | 80.00 | 40.00 | 44.00 |
| 91-431-10-09 | 110 | சொத்து வரி வசூலிக்கத்தக்கது காலியிடம் நிலுவை | 95.10 | 100.00 | 102.90 | 113.00 |
| 93-110-01-01 | 110 | விளம்பர வரி | 6.36 | 100.00 | 0.00 | 0.00 |
| | | **மொத்தம் - 110 (1)** | **5415.04** | **6875.00** | **5814.21** | **6397.00** |
| 94-110-10-01 | 110 | தொழில் வரி –நடப்பு | 1147.00 | 1200.00 | 1190.00 | 1309.00 |
| 94-431-19-04 | 110 | தொழில் வரி – வசூலிக்கத்தக்கது நிலுவை | 203.00 | 400.00 | 210.00 | 231.00 |
| | | **மொத்தம் - 110(2)** | **1350.00** | **1600.00** | **1400.00** | **1540.00** |
| | | **பெரு மொத்தம் - 110 (1+2)** | **6765.04** | **8475.00** | **7214.21** | **7937.00** |

**ஒதுக்கப்படும் வருவாய்**

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|
| 98-120-10-01 | 120 | சொத்து மாற்றங்களுக்குரிய வரி | 991.71 | 1200.00 | 1409.58 | 1500.00 |
| 98-120-10-02 | 120 | கேளிக்கை வரி | 180.60 | 250.00 | 191.18 | 250.00 |
| | | **மொத்தம் - 120** | **1172.31** | **1450.00** | **1600.76** | **1750.00** |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
### பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|
| **குத்தகை மற்றும் வாடகை வருவாயினங்கள்** | | | | | | |
| 83-130-10-06 | 130 | பேருந்து நிலைய கட்டணம் | 76.32 | 300.00 | 78.62 | 86.00 |
| 58-130-10-01 | 130 | வணிக வளாகங்கள் மற்றும் சந்தைகள் - வாடகை | 824.15 | 900.00 | 843.15 | 927.00 |
| 58-130-10-02 | 130 | சமுதாயக் கூடம்- வாடகை | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 58-130-10-03 | 130 | சந்தைக் கட்டணம் - தினசரி சந்தை | 1210.45 | 1400.00 | 1232.52 | 1356.00 |
| 58-130-10-04 | 130 | சந்தைக் கட்டணம் - வாரச் சந்தைகள் மற்றும் ஆண்டு குத்தகை | 95.18 | 220.00 | 104.80 | 115.00 |
| 83-130-10-07 | 130 | வண்டிப்பேட்டை / லாரி மார்கெட் / வாடகை கார்கள் நிறுத்துமிடக் கட்டணம் | 232.13 | 250.00 | 265.72 | 292.00 |
| 61-130-10-08 | 130 | சாலையோர மரங்கள் மூலம் வரவு | 1.18 | 2.00 | 1.24 | 1.00 |
| 06-130-20-01 | 130 | கட்டிட வாடகை | 31.90 | 40.00 | 36.47 | 40.00 |
| 06-130-30-02 | 130 | தங்கும் விடுதிகளுக்கான கட்டணம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 06-130-40-01 | 130 | நில வாடகை மற்றும் குத்தகைக் கட்டணம் | 18.15 | 35.00 | 21.77 | 24.00 |
| 42-130-80-05 | 130 | கட்டணக் கழிப்பிடங்கள் கட்டணம் | 231.66 | 250.00 | 238.15 | 262.00 |
| 83-130-80-03 | 130 | வாகனங்கள் நிறுத்துமிடக் கட்டணம் | 2.96 | 33.20 | 3.12 | 3.00 |
| 90-130-80-07 | 130 | கேபிள் டி.வி, கண்ணாடி இழை கேபிள் கட்டணம் | 168.14 | 350.00 | 179.47 | 197.00 |
| 58-431-40-08 | 130 | சந்தைக் கட்டணம்-தினசரி சந்தை வசூலிக்கப்படவேண்டிய நிலுவை | 72.69 | 100.00 | 85.72 | 94.00 |
| 06-431-40-01 | 130 | வணிக வளாகங்கள் மற்றும் சந்தைகள் - வாடகை - நிலுவை | 310.82 | 350.00 | 326.73 | 359.00 |
| 06-431-40-02 | 130 | மீன் மார்கெட் | 21.10 | 25.00 | 26.41 | 29.00 |
| 06-431-40-03 | 130 | மற்றவை | 93.60 | 125.00 | 514.05 | 565.00 |
| | | **மொத்தம் - 130** | **3390.43** | **4380.20** | **3957.94** | **4350.00** |

# வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
### பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|
| **சேவைக் கட்டணம் மற்றும் இதர கட்டணம்** | | | | | | |
| 02-140-20-01 | 140 | மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான அபராதக் கட்டணம் | 4.75 | 5.20 | 4.89 | 5.00 |
| 02-140-80-03 | 140 | பல்வகை பிடித்தங்கள் | 220.18 | 300.00 | 297.32 | 327.00 |
| 02-140-13-01 | 140 | நகல்களுக்கான விண்ணப்பக் கட்டணம் | 29.18 | 55.00 | 36.43 | 40.00 |
| 02-140-40-07 | 140 | இதரக் கட்டணம் | 43.65 | 65.00 | 59.74 | 66.00 |
| 21-140-70-01 | 140 | சாலைகளில் வெட்டப்பட்ட குழிகளை சீரமைத்தல் கட்டணம் | 536.19 | 750.00 | 562.95 | 619.00 |
| 30-140-11-01 | 140 | தொழில் உரிமக் கட்டணம் | 97.08 | 125.00 | 246.41 | 271.00 |
| 37-140-13-02 | 140 | பிறப்பு மற்றும் இறப்பு படிவங்கள் விற்பனை | 6.15 | 8.50 | 7.10 | 8.00 |
| 45-140-11-04 | 140 | ஆடு அறுவை கட்டணம் | 3.95 | 85.00 | 0.00 | 0.00 |
| 42-140-50-06 | 140 | கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் கட்டணம் | 0.69 | 90.00 | 0.92 | 1.00 |
| 61-140-60-01 | 140 | தோட்டம், பூங்காக்கள் மூலம் வரவு | 8.90 | 150.00 | 11.62 | 13.00 |
| 90-140-60-04 | 140 | நூலக வரி வரவினம் (10% நூலக வரி மீதான வசூல்) | 936.00 | 1170.00 | 994.72 | 1094.00 |
| 12-140-11-03 | 140 | கட்டிட உரிமக் கட்டணம் | 1772.35 | 2000.00 | 1812.75 | 1994.00 |
| 12-140-14-03 | 140 | அபிவிருத்திக் கட்டணம் | 29.47 | 35.00 | 32.88 | 35.50 |
| 12-140-14-04 | 140 | ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவன மருத்துவமனை நில விற்பனை | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 93-140-40-01 | 140 | விளம்பரக் கட்டணம் | 3.19 | 4.00 | 8.54 | 9.00 |
| 11-140-40-02 | 140 | நில அளவைக் கட்டணம் | 8.10 | 9.00 | 8.74 | 10.00 |
| 02-140-20-02 | 140 | நீதித் துறை அபராத கட்டணம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 02-140-13-03 | 140 | குப்பை வரி கட்டணம் | 1405.00 | 1500.00 | 1490.67 | 1640.00 |
| 02-140-13-04 | 140 | இதர சான்றிதழ் கட்டணம் | 2.75 | 3.50 | 3.18 | 3.50 |
| | | **மொத்தம் - 140** | **5107.58** | **6355.20** | **5578.86** | **6136.00** |

# வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
## பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|
| **விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம்** | | | | | | |
| 42-150-10-03 | 150 | அம்மா உணவகம் - உணவுகள் விற்பனை மூலம் வரவு | 65.36 | 90.00 | 67.03 | 80.00 |
| | | **மொத்தம் - 150** | **65.36** | **90.00** | **67.03** | **80.00** |
| **வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை** | | | | | | |
| 03-160-10-03 | 160 | அரசு மானியம் ( Turip,CGF,IGFand others ) | 1518.48 | 5000.00 | 2487.30 | 3000.00 |
| 03-160-10-04 | 160 | மாநில நிதிக்குழு மானியம் | 13427.34 | 14700.00 | 15441.04 | 16800.00 |
| 82-160-10-02 | 160 | பு. த. எம்.ஜி ஆர். சத்துணவுத் திட்ட மானியம் - வரவினம் | 42.16 | 50.00 | 52.92 | 60.00 |
| | | **மொத்தம் - 160** | **14987.98** | **19750.00** | **17981.26** | **19860.00** |
| **முதலீடுகள் மீதான வருவாய்** | | | | | | |
| 03-170-80-01 | 170 | முதலீடுகள் மீதான வருவாய் | 102.65 | 150.00 | 138.74 | 150.00 |
| | | **மொத்தம் - 170** | **102.65** | **150.00** | **138.74** | **150.00** |
| **வட்டி மூலம் வருவாய்** | | | | | | |
| 03-171-10-01 | 171 | சேமிப்பு கணக்கு மீதான வங்கி வட்டி | 86.15 | 100.00 | 94.36 | 120.00 |
| | | **மொத்தம் - 171** | **86.15** | **100.00** | **94.36** | **120.00** |
| **இதர வருவாய்** | | | | | | |
| 03-170-80-01 | 180 | இதர வருவாய் (மனைப்பிரிவு, சொத்து வரி பெயர் மாற்றம் இதர இனங்கள்) | 3168.47 | 3300.00 | 3273.65 | 3500.00 |
| 03-180-11-01 | 180 | காலாவதி ஆகும் வைப்பு தொகை | 89.15 | 150.00 | 93.67 | 160.00 |
| | | **மொத்தம் - 180** | **3257.62** | **3450.00** | **3367.32** | **3660.00** |
| **வைப்புத் தொகை ( கடைகள் )** | | | | | | |
| 03-340-20-01 | 340 | வைப்புத் தொகை (கடைகள்) | 0.00 | 750.00 | 0.00 | 750.00 |
| | | **மொத்தம் - 180** | **0.00** | **750.00** | **0.00** | **750.00** |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
## பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|
| **நிதி மாற்றம்** | | | | | | |
| 03-170-80-01 | 311 | நிதி மாற்றம் ( குடிநீர் நிதி ) | 650.00 | 800.00 | 780.00 | 1000.00 |
| | | **மொத்தம் - 311** | **650.00** | **800.00** | **780.00** | **1000.00** |
| **மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு** | | | | | | |
| 03-320-20-01 | 320 | குடும்ப நல மானியம் (பணியாளர்) | 299.69 | 800.00 | 293.27 | 600.00 |
| 03-320-20-02 | 320 | மத்திய அரசு திட்டங்கள் மானியம் | 2286.42 | 7000.00 | 2433.32 | 2500.00 |
| 03-320-20-03 | 320 | மத்திய அரசு திட்டம் (பொது சுகாதார மானியம் ) | 940.72 | 1500.00 | 947.62 | 1000.00 |
| | | மாநில அரசு திட்டம் (பொது சுகாதார மானியம் ) | 36.58 | 500.00 | 40.50 | 600.00 |
| | | **மொத்தம் - 320** | **3563.41** | **7800.00** | **2726.59** | **3100.00** |
| | | **மொத்த வரவினம் ( வருவாய் )** | **39148.53** | **53550.40** | **43507.07** | **48893.00** |

## வரவு செலவுத் திட்டம்
## 2026 - 2027
### பொது நிதி

ரூபாய் இலட்சத்தில்

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|

**வரவினம் ( மூலதனம் )**
**மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு**

| கணக்கு குறியீடு | முக்கிய குறியீடு | கணக்கு விளக்கம் | உள்ளபடி வரவு-செலவு (2024-25) | திட்ட மதிப்பீடு (2025-26) | திருத்திய திட்ட மதிப்பீடு (2025-26) | திட்ட மதிப்பீடு (2026-27) |
|---|---|---|---|---|---|---|
